
# ஈழத்துச்
# சிறுவர் பாடல் களஞ்சியம்

தொகுப்பாசிரியர்: கலாநிதி செ. யோகராஜா



குமரன் புத்தக இல்லம்

0779217294

**ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்**

# ஈழத்துச்
# சிறுவர் பாடல்
# களஞ்சியம்

தொகுப்பாசிரியர்

**கலாநிதி செ. யோகராசா**

**குமரன் புத்தக இல்லம்**

கொழும்பு – சென்னை

2007

வெளியீட்டு எண் : 270

**ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்**
– தொகுப்பாசிரியர் : கலாநிதி செ. யோகராசா எழுதியது

பதிப்பு : 2007

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 2421388, மி. அஞ்சல்: kumbh@sltnet.lk
– 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12,

ஓவியங்கள் : வாசன்

**Elathu Siruvar Padal Kalanchiyam**
Edited by: Dr. S. Yogarajah

First Edition : 2007

*Published by* **Kumaran Book House**
- 361,1/2 Dam Street, Colombo -12,Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* **Kumaran Press (Pvt) Ltd.**
- 361,1/2 Dam Street, Colombo -12

**ISBN 978 - 955 - 659 - 030 - 7**

## தொகுப்பாசிரியரிடமிருந்து...

ஈழத்திலும், தமிழகத்திலும் ஈழத்துக் கவிதைகளின் தொகுப்பாக அவ்வப்போது சிறு நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் பேராசிரியர் ஆ.சதாசிவம், சிலோன் விஜயேந்திரன், தமிழவன், ஸ்ரீபிரசாந்தன் ஆகியோர் இவ்வேளை நினைவிற்கு வருகின்றனர். ஈழத்துச் சிறுகதைகளின் தொகுப்பு ஒன்று மட்டுமே செ. யோகநாதன் அவர்களின் முயற்சியினால் வெளிவந்துள்ளதாக நினைவு. ஆயின், ஈழத்துச் சிறுவர் பாடல்களின் தொகுப்பு எதுவுமே ஈழத்திலோ தமிழ்நாட்டிலோ (திமிலை மகாலிங்கம் வெளியிட்ட 'கனி அமுதம்', கனகசெந்தி நாதன் தொடக்கம் மு.பொன்னபலம் வரை அவ்வப்போது வெளியிட்ட சிறு நினைவு மலர்கள் நீங்கலாக) வெளிவந்திருப் பதாகத் தெரியவில்லை. ஆக, இத்துறையில் இதுவே பெரிய அளவிலான முதன் முயற்சியாகின்றது.

மேற்கூறியவாரான முயற்சி தமிழ்பேசும் நல்லுலகில் இடபெறாது போனமைக்குக் காரணமுள்ளது. அதாவது, பெற்றோர்களோ பாடசாலை ஆசிரியர்களோ விமர்சகர்களோ இத்துறையின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் இன்று வரை உணர்ந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. மறுபுறத்தில், சிறுவர் இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுகின்ற படைபாளிகளுட் பலர் இவ்விலக்கிய முயற்சிக்குரிய தனித்துவ இயல்புகள் பற்றி அறியாத நிலையிலுள்ளனர். தவிர ஆரம்ப வகுப்புகளிலே கற்பிக்கின்ற கணிசமான ஆசிரியர்கள் சிறுவர் பாடல்களை தேர்ந்தெடுத்துக் கற்பிப்பதில்லை. பெரும்பாலான சிறுவர் கலைவிழாக்களில் சினிமாப் பாடல்களே சிறுவர்களால் ஆர்வத் துடன் அபிநயக்கப்பட்டு வருவதும் கண்கூடு. இவ்வாறான

ஆரோகியமற்ற நிலைமையின் ஆதங்கம் காரணமாகவே குமரன் புத்தக இல்லத்தினர் இம்முயற்சியில் ஆர்வங் கொண்டனர் என்று கருதுகின்றேன்.

இத்தகைய நூல் வெளிவருகின்ற இவ்வேளையில் இத்துறையில் வெவ்வேறு தளங்களிலே சாதனைகள் செய்த, செய்துவருகின்ற ஆறுமுக நாவலர் , நாவாலியூர் சோமசுந்தரப் புலவர், முன்னாள் வட மாநில கல்வி அதிகாரி க.அருள்நந்தி, ச.பஞ்சாட்சர சர்மா, க. நவசோதி, அநு.வை.நாகராஜன், செ.யோகநாதன், ச. அருளானந்தம், மயிலங்கூடலூர் நடராசன், ஒ.கே. குணநாதன், மாஸ்டர் சிவலிங்கம், சுவைர், நாகூர்பாவா, திமிலை மகாலிங்கம், திமிலை துமிலன், கவீ, அண்மையில் காலாமான வ. இராசையா முதலானோர் ஞாபகத்தில் வருகின்றனர்.

இத்தொகுப்பிலே ஈழத்துச் சிறுவர் பாடலாசிரியர்கள் அனைவரதும் பாடல்கள் இடம் பெற்றிருக்குமென்று எவரும் கருதிவிட மாட்டார்கள். இடம் பெற்றவை அனைத்தும் சிறந்த பாடல்கள் என்பதற்குமில்லை. படைப்பாளிகள் பற்றிய பின்னிணைப்புக் குறிப்புகளும் முழுமை பெறாதவை. இவ்விதங் களில் இவை எதிர்காலத்தில் முழுமையெய்த இத்துறை ஆர்வலர்கள் உதவுவார்கள் என்றே நம்புகின்றேன்.

சிறுவர் இலக்கியத்துறையில் எனக்கு முதல் முதல் ஆர்வத்தை ஏற்படுத்தி எனக்கு மலர் ஒன்றுக்கு கட்டுரை தரும்படி கேட்ட பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், இந்நூல் முயற்சி தொடர்பாக ஆலோசனை வழங்கிய பேராசிரியர் கா. சிவத்தம்பி, சித்திரம் வரைந்துதவிய வாசன் ஆகியோருக்கும் சமூக நோக்குடைய வெளியீட்டாளரென்று நான் கருதுகின்ற நண்பர் க.குமரனுக்கும் இவ்வேளை நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கிழக்குப் பல்லைக்கழகம் **கலாநிதி செ. யோகராசா**
28.08.2007 மொழித்துறை

# பொருளடக்கம்


தொகுப்பாசிரியரிடமிருந்து........ v

1. கடற்கரைக்குப் போனோம் 3
2. பாலர் பாட்டு மின்மினி 5
3. ஆகாய விமானம் 7
4. மாட்டு வண்டில் 9
5. இளந்தளிர் 10
6. தேசகீதம் 11
7. பூமியை அறிதல் 13
8. கத்தரி வெருளி 15
9. ஆலமரப்பாட்டு 19
10. வளர்பிறை 21
11. நல்ல மாம்பழம் 23
12. பகற் செய்வேலை 25
13. கிளிப்பாட்டு 27
14. தேக சுத்தம் 28
15. தேசாந்தரியும் குரங்கும் 29
16. கிளிப்பாட்டு 31
17. சுகாதாரப் பழக்கம் 33
18. நரியும் முதலையும் 35
19. தோசை 37
20. தேகாப்பியாசம் 39
21. சின்ன வீரன் 41
22. பாட்டி அழுகின்றாள் 42

| | | |
|---|---|---|
| 23. | காய்கள் கட்டிய வெருளி | 43 |
| 24. | செய்மதிகள் | 45 |
| 25. | பலகாரம் | 47 |
| 26. | பாசம் | 49 |
| 27. | பலூன் | 50 |
| 28. | எறும்புகள் | 51 |
| 29. | பாரதி பாட்டு | 53 |
| 30. | சாப்பிடவா | 55 |
| 31. | தாத்தா | 57 |
| 32. | ஆக்கிமீடீஸ் | 58 |
| 33. | விருந்து | 60 |
| 34. | அம்மாவின் அன்பு | 61 |
| 35. | ஆசை அம்மா | 63 |
| 36. | அடிமை வாழ்வு | 64 |
| 37. | தவளைக் கூத்து | 67 |
| 38. | புள்ளிப் புள்ளி மானே | 68 |
| 39. | எங்கள் அம்மா | 69 |
| 40. | சட்டை | 71 |
| 41. | அழகு நிலா! | 72 |
| 42. | யானைத் தாத்தா | 73 |
| 43. | தோட்டம் | 74 |
| 44. | கப்பல் விற்றான் கொட்டை | 75 |
| 45. | புதுவித மனிதர் | 76 |
| 46. | மரம் | 77 |
| 47. | ஆறுமுகநாவலர் | 78 |
| 48. | எண் பாட்டு | 79 |
| 49. | பறவைக் கப்பல் | 81 |
| 50. | நிலா | 82 |
| 51. | நாலு வயது வாத்தியார் | 83 |
| 52. | ஆமையாரின் வீடு | 84 |
| 53. | ஈழநாடு | 85 |

54. பூச்சு (சேர்ந்து பாடல்) 86
55. பந்து விளையாட்டு 87
56. விஞ்ஞானம் 88
57. காலைக் குயிலே! 89
58. ஊர்க்குருவி சொன்ன கதை 91
59. புத்திமதி! 93
60. பச்சைக் கிளியே 94
61. வானொலி 95
62. பார் பார் பூமிபார் 96
63. அறிந்து கொள்வாய் 97
64. தும்பி 99
65. சுவாமி விபுலானந்தர் 100
66. தட்டுக் கோடு 101
67. பட்டு ரோஜா 103
68. ரோசாவும் நேருவும் 104
69. பாரில் வந்து பாருங்கள் 105
70. பட்டம் 107
71. கோழிக்குஞ்சு 109
72. குட்டி முயல் 111
73. வீதி ஒழுங்கைப் பேணிடுவீர் 112
74. கவனம் பாட்டி 113
75. பட்டுப் பொம்மைப் பூனையனார் 115
76. பாக்கு மரம் 116
77. வீதி ஒழுங்கு 117
78. சிறுவனும் புள்ளிமானும் 119
79. ஐசெக் நியூட்டன் 121
80. காந்தித் தாத்தா 123
81. வெள்ளைக் கொக்கு 125
82. நாவலர் பெருமான் 127
83. எங்கள் பாடசாலை 129
84. பேராசை பிடித்த புள்ளு 130

85. பாட்டாவும் பேரனும் 131

86. கள்ள எலி 133

87. மழையே! மழையே! 135

88. தவளையும் சிறுமியும் 137

89. குறையில் நிறை 139

90. முயற்குட்டி 141

91. கிழமை நாட்கள் 142

92. உணவு 143

93. பட்டாம் பூச்சி 145

94. ஒன்றும் ஒன்றும் இரண்டு 146

95. அல்வா 147

96. அழகு அணிலே ஓடிவா 149

97. நான் யார்? 151

98. அம்மா! 153

99. ஆமை அண்ணா 155

100. திரும்பி இங்கே வருவாயோ? 157

101. கணினிமயம்! கணினிமயம்! 158

102. அப்பம் சுடுவோம் 159

103. பள்ளித் தோழர்களுக்கு 161

104. தட்டு தட்டு 163

105. பூனை 165

106. இரும்பு மூளைப் பெட்டி 167

107. சின்னச் சின்னக் குருவிகள் 168

108. பனிவீழ்ச்சி 169

109. கீரைகளை உண்போம் 171

110. தூயவழி 172

111. பாடசாலை போகிறோம் 173


112. தங்கமனசு வாத்தியார் 175

113. வீதி விதிகள் 176

கவிஞர்கள் விபரம் 177

# ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்





# கடற்கரைக்குப் போனோம்

கடற்கரைக்குப் போனோம்
கரையில் நின்று பார்த்தோம்
அடிக்கும் அலை கண்டோம்
ஆனந்தமே கொண்டோம்

கத்தரிக்கோல் போன்ற
காலிரண்டை ஏந்தி
கொத்துக் கொத்தாய் நண்டு
கோலம் போடக் கண்டோம்

மல்லிகைப் பூப் போலே
மண்ணில் சிப்பி, சங்கு
கொள்ளையாகக் கண்டோம்
கூட்டி அள்ளிக் கொண்டோம்

தோணியொன்று கடலில்
துள்ளித்துள்ளி நெளிந்தே
மீன் பிடிக்கப் போகும்
மெத்தப் பயமாகும்

தலையில் சால்வை கட்டி
துள்ளித்துள்ளி நெளிந்தே
மீன் பிடிக்கப் போகும்
மெத்தப் பயமாகும்

தலையில் சால்வை கட்டி
தாம்பு கையில் பற்றி
வலையிழுக்கும் தோழர்
வாயில் வரும் பாடல்

சூரை, வாளை, காரல்
சூடை, சாளை, சீலா
பாரை, பாலை, மீன்கள்
பட்டதந்த வலையில்

எங்களுக்கும் மீன்கள்
இரண்டு மூன்று தந்தார்
கொண்டு வீடு வந்தோம்
குழம்பு வைத்துத் தின்றோம்.

**- நீலாவணன்**


# பாலர் பாட்டு
## மின்மினி

மின்னி மின்னிப் பறந்து போகும் மின்மினி - உன்
மேனியிலே வெளிச்ச மேது மின்மினி
துன்னும் இருள் வேளையிலே மின்மினி - உன்
சோதி உடல் தோன்றுதல்லோ மின்மினி
(மின்னி மின்னி)


பட்டப் பகல் வேளையிலே மின்மினி - உன்
பளபளக்கும் மேனி யெங்கே மின்மினி
விட்டு விட்டுச் சுடருகின்றாய் மின்மினி - உன்
விளை யாட்டுத் தோழரெங்கே மின்மினி
(மின்னி மின்னி)

தங்கத்திலே பதிக்க நல்ல முத்து நீ - ஒளி
தந்து சிரித்தோடுகின்றாய் மின்மினி
அங்க மெல்லாம் பளபளக்கும் மின்மினி - உன்
அழகினிலே மயங்கி விட்டேன் மின்மினி.
(மின்னி மின்னி)

- மண்டூர் மு. சோமசுந்தரம்பிள்ளை



# ஆகாய விமானம்




ஆட்களை எல்லாம் ஏற்றிடுமே
ஆகாய வழியே பறந்திடுமே
நாட்டு மக்கள் பயன்பெறவே
நாமும் செய்த வண்டியிது.

மாடும் இழுத்து வருவதில்லை
மாயம் நிறைந்தே விரைந்தேறும்
சூடு குளிரைத் தாண்டியுமே
சுதந்திரம் கொண்டு பறந்திடுமே.

குதிரை இதையும் இழுப்பதில்லை
குதித்துப் பறக்கும் வண்டியிது
பதியின் கையில் சவுக்குமில்லை
மதியை நோக்கி விரைந்திடுமே !

- தர்மேந்திரா



# மாட்டு வண்டில்

வண்டில் அதோ வண்டில்
மாடு இழுக்குது வண்டில்
எருத்து மாட்டு வண்டில்
இரண்டு சில்லு வண்டில்

வெள்ளை மாட்டு வண்டில்
மெல்லச் செல்லும் வண்டில்
நெல்லு மூட்டை ஏற்றியே
நிறைந்து போகுது வண்டில்

புகை எழுப்பா வண்டில்
புனிதமான வண்டில்
வயல் வெளிக்குச் சென்று
வைக்கோல் ஏற்றுது வண்டில்
இரைச்சல் இல்லா வண்டில்
எங்கும் போகும் வண்டில்
முள்ளும் குத்தா சில்லு
உள்ள நல்ல வண்டில்.

- மண்டூர் தேசிகன்

# இளந்தளிர்

மலர்கள்
மலர்களாம் மலர்களாம்
மணம் வீசும் மலர்களாம் !
மல்லிகையாம் ரோஜாவாம்
மகிழ்ச்சி தரும் மலர்களாம் !

காண்பவரை மயக்கிடும்
வண்ணமிகும் மலர்களாம் !
தேனீக்கள் தேடிவரும்
சிங்கார மலர்களாம் !

கடவுளுக்குக் கனிவுடனே
காணிக்கை யாவதற்குக்
காலமெல்லாம் மணம் பரப்பிக்
காத்திருக்கும் மலர்களாம் !

**- ஜூட் திலீபன் பிரான்சிஸ்**

# தேசகீதம்

## பல்லவி

திருவருள் சூழ்க - எங்கள்
தேசமே வாழ்க

## கண்ணிகள்

பொன் இலங்கை மாநாடு
போற்றும் எங்கள் தாய்நாடு
அந்நிய நாட்டினரும்
அடுத் தடுத்து வாழ்நாடு

நாற்றிசையுங் கடலொலிக்கும்
நடுத்திசையில் மலை யொலிக்கும்
ஆற்றிடைத்தீம் புனல் கொளிக்கும்
அழகுடைய தெம்நாடு

ஆணி முத்து நற்பவளம்
அம்பர் சங்கு கெம் பெனும் நல்
மாணிக்கம் நீலம் இவை
வகையாய் விளங்கு நாடு

பூவுலகின் கற்பகம் போற்
பொருந்துபனை, தெங்கு பல
கானங் கழனி களுங்
கலந் திருப்ப தெம்நாடு

புத்தர் உவந்து வந்த
பொன் நாடு பற்பலம்
தத்தர் மகிழ்ந்து புகழ்
மாட்சியு றும் மாநாடு

தேவர்கோன் பொன் நகரும்
திரவியக் கோன் தன்நகரும்
ஆவ திலை நேரளவீர்
அற்புதமாம் எம்நாடு

தன்னுயிர் போல் மன்னுயிரைத்
தரணிமிசை காத்தாண்ட
மன்னர் பலர் வாழ்ந்திருந்த
மாவள நா டெம்நாடு

பாரதினில் ஐந்திலொரு
பாகமதை ஆளும் இங்கிலிஷ்
சீர் உறும் செங்கோல் இனிதெம்
தேசமதி லே சிறக்க - திரு அருள்.

**- ஜே. கே. சீனித்தம்பி**

# பூமியை அறிதல்


தோடம் பழம் போலே பூமி
சூரியனைச் சுற்றும் பூமிப்
பாடம் படிப்போம் பூமிப்
படத்தைப் பார்ப்போம் மேவி

நாம் பிறந்தது பூமியிலே
நாம் வளர்ந்தது பூமியிலே
நாம் இருப்பது பூமியிலே
நாம் நடப்பது பூமியிலே

பந்த டிப்பது பூமியிலே
பாடி ஓடுதல் பூமியிலே
மந்தை மேய்ப்பது பூமியிலே
மாடு வளர்ப்பதும் பூமியிலே

நெல் விதைப்பது பூமியிலே
நீர் இறைப்பது பூமியிலே
எல்லாப் பயிரும் பூமியிலே
மாடு வளர்ப்பதும் பூமியிலே

**- சி. அகிலேச சர்மா**



# கத்தரி வெருளி

1

கத்தரித் தோட்டத்து மத்தியில் நின்று
காவல் புரிகின்ற சேவகா - நன்று
காவல் புரிகின்ற சேவகா !
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார் - உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்?

2

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா - என்றும்
காவல் புரிகின்ற சேவகா !
எண்ணி உன்னைப் போல் இரவுபகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

3

வட்டமான பெரும் பூசினிக் காய் போல்
மஞ்சள் நிற உறுமாலைப்பார் - தலையில்
மஞ்சள் நிற உறுமாலைப்பார் !
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார் - இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார் !

### 4

தொட்டு முறுக்காத மீசையைப்பார் - கறைச்
சோகி போலே பெரும் பல்லைப்பார் - கறைச்
சோகி போலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார் - ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்!

### 5

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையும் கண்டதோ? - உன்றன்
பொல்லாத பார்வையும் கண்டதோ?
வாட்ட மில்லாப் பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக் கொண்டோடுதே - வெடி
வாலைக் கிளப்பிக் கொண்டோடுதே

### 6

கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக் கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே - கூடிக்
கத்திக் கத்திக் கரைந் தோடுமே
நள்ளிரவில் வருகள் வனுனைக் கண்டு
நடு நடுங்கி மனம் வாடுமே - ஏங்கி
நடு நடுங்கி மனம் வாடுமே

### 7

ஏழைக் கமக்காரன் வேலைக் குதவி செய்
ஏவற்காரன் நீயே யென்னினும் - நல்ல
ஏவற்காரன் நீயே யென்னினும்
ஆளைப் போலப் போலி வேடக்காரன் நீயே
ஆவதறிந்தன் னுண்மையே - போலி
ஆவதறிந்தன் னுண்மையே

## 8


தூரத்திலே யுனைக் கண்டவுட னஞ்சித்
துண்ணென் றிடித்ததென் நெஞ்சகம் - மிகத்
துண்ணென் றிடித்த தென் நெஞ்சகம்
சேரச் சேரப் போலி வேடக்காரனென்று
தெரிய வந்ததுன் வஞ்சகம் - நன்று
தெரிய வந்ததுன் வஞ்சகம்

## 9

சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதை போல்
தேசத்திலே பலர் உண்டுகாண் - இந்தத்
தேசத்திலே பலர் உண்டு காண்
அங்கவர் தம்மைக்கண் டேமாந்து போகா
அறிவு படைத்தனன் இன்று நான் - உன்னில்
அறிவு படைத்தனன் இன்று நான்.

**- சோமசுந்தரப் புலவர்**







# ஆலமரப்பாட்டு

ஆலமரம் ஆல மரம்
அழகான ஆலமரம்
பாலர் நாங்கள் ஆடல் பாடல்
பழக நல்ல ஆலமரம்.

- மா. பீதாம்பரம்






# வளர்பிறை

அம்மா வெளியே வாஅம்மா !
அழகாய் மேலே பாரம்மா !
சும்மா இருந்த சந்திரனைத்
துண்டாய் வெட்டின தாரம்மா?

வட்டத் தோசை சுட்டது போல்
வானி லிருந்த சந்திரனைத்
துட்டச் சிறுவன் யாருடைத்தான்?
சொல்வாய் உண்மை தோன்றிடவே

மட்டிப் பயலவன் வெட்டிவிட்டு
மற்றப் பாதியை எங்கெறிந்தான்?
கிட்ட மினுங்குங் கட்டியெல்லாம்
வெட்டிய மிச்சத் துண்டுகளோ?

**- அல்வையூர் மு. செல்லையா**



# நல்ல மாம்பழம்


நல்ல நல்ல மாம்பழம்
நாட்டில் வந்த மாம்பழம்
வெல்லக் கட்டி மாம்பழம்
வெண்ணெய்க் கட்டி மாம்பழம்

பொன்னின் மின்னு மாம்பழம்
புதிய பச்சை மாம்பழம்
கிள்ளை மூக்கு மாம்பழம்
கிடைக்கும் ஒட்டு மாம்பழம்

செம்மை யான மாம்பழம்
தேனி னினிய மாம்பழம்
தோலும் விதையும் நீங்கி நாஞ்
சுவைத்துச் சுவைத்துண் மாம்பழம்

பால ருண்ணு மாம்பழம்
பாடி யாடு மாம்பழம்
வேனிற் கால மாம்பழம்
விரும்பி யாரு முண்பமே.

**- ச. பஞ்சாட்சரசர்மா**



# பகற் செய்வேலை

பாலர் நாங்கள் கூடிக் கூடி
பாங்குடனே பாடி
பகற் செய்வேலை தன்னைக்காட்டிப்
பணிந்திடுவோம் ஆடி

சூரியன் தான் உதிக்க முன்னர்ச்
சுறுக்கெனவே எழுந்து
சுத்தமாக மலசலத்தைக்
கழித்திடுவோம் நினைத்து


காலலம்பிப் பல்துலக்கிக்
கவனமாக வேகுளித்து
கடவுள்தனைக் கும்பிடுவோம்
கருத்துடனே பணிந்து

அப்பு, ஆச்சி சொல்பணியை
அன்புடனே செய்து
அவர்கள் தரும் நல்லுணவை
ஆசையுடன் உண்டு

புத்தகப்பை யோடு பள்ளி
புனிதமாகச் சென்று
புத்தியாகப் படித்து நாமும்
போவம் எங்கள் வீடு

மாலை செய்யும் வேலைகளை
மறந்திடாமற் செய்து
மனத்தினிலே மகிழ்ச்சி கொண்டு
வாழ்ந்திடுவோம் நாமே.

**- என். எஸ். முருகேசு**



# கிளிப்பாட்டு

பச்சை நிறத்துச் சிறகுடையாய்
பவளம் போன்ற வாயுடையாய்

சோலை தனிலே வாழ்ந்திடுவாய்
சொல்லித் தந்தது பேசிடுவாய்

கொவ்வைக் கனியை மிக விரும்பிக்
கௌவிக் கௌவித் தின்றிடுவாய்

கழுத்தி லாரக் கவினுடையாய்
கண்டோர் மகிழும் வடிவுடையாய்

பாட்டுப் பாடும் பைங்கிளியே
பஞ்ச வர்ணப் பசுங்கிளியே

வா! வா! என்று கூப்பிடுவோம்
வந்தெங் கையில் இருந்திடுவாய்.

**- சி. தங்கசாமி ஐயர்**

# தேக சுத்தம்

சுத்தஞ் செய்வோம் சுத்தஞ் செய்வோம்
சுகமாயிருக்க நாம் சுத்தஞ் செய்வோம்
இத்தலை சீவி நாம் இழுத்திடுவோம்
ஈர் பேன் யாவையும் ஒழித்திடுவோம்

காதின் ஊத்தை வழித்திடுவோம்
கண்ணின் பீளை கழித்திடுவோம்
மூக்குச் சளியைக் கைவிரலால்
நீக்கிக் கையைக் கழுவிடுவோம்

பல்லை விளக்கி நாக்கூத்தை
நல்லாய் வழித்து நாமெறிவோம்
நல்லாய்க் கால்முகங் கழுவிடுவோம்
நகங்கை சுத்தம் செய்திடுவோம்

வலது கையால் சாப்பிடுவோம்
மறுகை சேராமல் விட்டிடுவோம்
கை விரல் சூப்பி நாம் பழகோம்
கால் கழுவாமலுட் கால் வையோம்.

- ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளை

# தேசாந்தரியும் குரங்கும்

தேசஞ்சுற்றிப் பார்ப்பதற்குச்
சென்ற ஒரு சீமான் - சென்ற ஒரு சீமான்
செத்தது போற் கிடந்த ஒரு
சிறு குரங்கைக் கண்டான்.

கண்டவுடன் குனிந்து நின்று
கவனமுடன் பார்த்து - கவனமுடன் பார்த்து
கடு வருத்த மாயிருப்பக்
கண்டதனை எடுத்தான்.

எடுத்துத் தோள் மீது வைத்து
எங்குமுடன் கொண்டு - எங்குமுடன் கொண்டு
ஈற்றில் வெயில் வருத்த அவன்
இளைத்து நிலம் வீழ்ந்தான்.


வீழ்த்தனைக் கண்ட மந்தி
வேகமுடன் சென்று - வேகமுடன் சென்று
விரும்பும் இள நீர்ப்பறித்து
விரும்பி முன்னே வைத்தது.

அன்புடனே நின்ற பொழு
தங்கவனு முண்டு - அங்கவனு முண்டு
ஆயாசந் தீர்ந்தெழுந்தான்
அக் கணத்திற் றானே.

கண்டீரோ பிள்ளைகளே
காதலுடன் குரங்கைக் - காதலுடன் குரங்கைக்
கொண்டு சென்ற தாலேயந்தக்
குரங்கு செய்த நன்மை.

ஆதலினாற் பிள்ளைகளே
ஆரிடத்தும் நீங்கள் - ஆரிடத்தும் நீங்கள்
ஆதரவா யிருப்பின் உமக்கு
அவருதவி செய்வார்.

- ஜே. கே. சீனித்தம்பி



# கிளிப்பாட்டு

பச்சை நிற மோநீ ஆ! ஆ! - கிளியே
பறந்து என் கையில் வா, வா,
கொச்சை மொழியுரைத்தல் ஆகா - பாட்டு
அச்சமில்லாது சொல்லித் தா, தா.

சிவப்புப் பழம் விதைகள் தேடி - கிளியே
சீக்கிரம் வருவேன் பாடி
உன்னைப் பிரிந்தொரு நாடி - நேரம்
உறங்கேன் நான் மனம் வாடி.

பொந்துக்குள் இருந்த போது - கிளியே
இந்தப் பழங்களுனக் கேது
வந்து இவற்றை நீ தின்பாய் - உந்தன்
வன்னக் கூட்டிலிருந் தின்பாய்.

மஞ்சள் அரைத்து வைப்பேன் குளிக்க - கிளியே
மாநிலத் தோரு மக் களிக்க
கொஞ்சம் படுத்துறங்கு காணும் - பின்பு
குழந்தையுடன் பேச வேணும்.

கறுப்புப் பூனை வந்து குந்தி - கிளியே
காத்துக் கொண்டிருக்குமங்கே முந்தி
பாய்ந்து பிடிக்க வரும் நேரம் - ஓடி
பறந்துவா பார்ப்பம் உந்தன் வீரம்.

வட்டில் நிறையப்பால் தருவேன் - கிளியே
வயிறு நிறைய நீ பருகேன்
கொட்டி லிருக்கும் சாரைப் பாம்பு - அம்மா
கொல்லுமென்றால் நீயும் நம்பு.

நீல மேகத்திற் பறந்து - கிளியே
ஓலமிடாதே வாய் திறந்து
பாலன் என்நேரம் மறந்து - நீயும்
போகாதே காட்டுக்குப் பறந்து.

வெள்ளைக் கழுத்துடைய பருந்தும் - கிளியே
அள்ளி இறாஞ்சியுனை யருந்தும்
துள்ளி வெளிப்படாதே சும்மா - நானும்
பள்ளி போகவேணும் பெத்தம்மா.

**- கே. கே. செபஸ்தியாம்பிள்ளை**

## சுகாதாரப் பழக்கம்


காலையி லெழுந்திடுவோம் - மேலாங்
கடவுளடி யைத் தினமும் தொழுதிடுவோம்
வைகறைத் துயிலெழுவோம் - தூக்க
மயக்கமற வே பயிற்சி மகிழ்ந்து செய்வோம்.

வெள்ளென எழும்புவதால் - நாளும்
வீரம் சுகம் தேகபெலம் விளங்கிடுமால்
அவசியமாம் கருமம் - அதனை
அதி யொழுங் காயியற்றி அனுதினமும்.

மலசல கூடமதே - அன்றி
மற்றைய இடத்தில் மல சலங்கழியோம்
வெளிதனில் மலங்கழித்தல் - பொல்லா
வீங்கு சோகை பாண்டு தரும் மிகுதியுமே.

கொக்கிப் பெயர்க்கிருமி - அதனாற்
கோடிசனம் மாய்கின்றாரே குவலயத்தில்
ஆகையால் அனைவருமே - கக்கூசு
ஆக்கியுப யோகித்திடல் அவசியமே.

**- அ. சிறில்**



# நரியும் முதலையும்

முன்னர் நடந்த கதையொன்றை
முற்றும் முழுதும் கூறுவென்கேள்
காட்டில் வசித்த குள்ளநரி
நாட்டுப் பக்கம் இரை தேடி
அங்கும் இங்கும் அலைந்தலைந்து
அலறிச் சோர்ந்தது தாகத்தால்
தண்ணீர்த் தாகம் மிகமிஞ்ச
எண்ணி யெண்ணி மெல்ல மெல்ல
எழுந்து நடந்தோர் எழிலாற்றை
விழுந்து விழுந்து கிட்டியதே
பாயும் நீரில் வாய் வைத்து
தூய நீரைக் குடிக்கையிலே
ஆற்றில் வசித்த முதலை யொன்று
அந்த நரியைக் கண்டதுவே
கண்ட முதலை கள்ளமதாய்
காணான் போல நடித்து மிக்க
நீரில் வந்து நீர் குடித்த
குள்ள நரியின் குறுங்காலை
கள்ளன் போலக் கௌவினதே
மோசம் மோசம் வந்த தென்று
நீசர் நீசம் போன்ற நரி
ஆகா! ஆகா! என நகைத்து
அந்த முதலை தனைப்பார்த்து
சேச்சே! சேச்சே! மடைமுதலாய்

மரத்தின் வேரைக் கௌவலாமோ
மரமும் உனக்கு இரையாமோ
மதிதா னிலையோ போ போ போ
என்று எள்ளி நகையாட
மெய்தானென்று மடைமுதலை
நரியின் காலை உடன்விட்டு
மரத்தின் வேரை நரியென்று
மதித்து மரத்தைப் பிடித்தளவில்
மதியிற் சிறந்த குள்ள நரி
செத்தேன் பிழைத்தேன் சிவாவென்று
மெத்த விரைவாய் ஓடியதே
தந்திர மொருவர்க் குண்டானால்
மந்திரம் வேண்டாம் மாநிலத்தில்.

**- என். தம்பிப்பிள்ளை**

# தோசை


அம்மா தோசை சுடுகின்றாள்
அருகில் ஓடிச் செல்கின்றோம்
சும்மா இருங்கள் என்கின்றோம்
சுட்டுச் சுளகில் இடுகின்றாள்

அடுப்பை நன்றாய் எரிக்கின்றாள்
அகப்பை யினில்மா எடுக்கின்றாள்
தடுக்கை நாங்கள் விரிக்கின்றோம்
தருவேன் பொறுங்கள் என்கின்றாள்

தட்டைக் கரண்டி பிடிக்கின்றாள்
சரியாய்ப் பெரிய நிலவைப் போல்
வட்டத் தோசை சுடுகின்றாள்
வடிவாய்த் தின்பீர் என்கின்றாள்

சம்பல் அரைத்துத் தாளித்துச்
சட்டி நிறைய இருக்கிறது
தம்பி உண்ணத் தொடங்கோமோ?
சாப்பா டென்றால் விரும்போமோ?

- **மஹாகவி**



# தேகாப்பியாசம்

மாலைவெயில் மருந்தெனவே மருத்துவர்கள் கூறுவதால்
மாலை வெயில் போகுமுன்னே வாரும் விளையாட

விளையாட்டால் வியர்வையது வெளிவருவ துண்மை
களையாதார்க் கதுவருவ தில்லையெனக் காண்பாய்

வெளிப் போகும் வியர்வையது விஷநீ ரதாகும்
வெளிக்கழிந்தே யதுபோக மிகு பசியுண்டாகும்


பசித்துண்ணில் உடல்முழுதும் பலத்திரத்தம் ஊறும்
நிசியதனிற் கண்ணயர்ந்து நித்திரையும் ஏறும்

தேகமெலாம் பருத்து நலந் தேசுடைமை சேரும்
ஆகுந் தொழி லேதுஞ்செய ஆசை நமக் காகும்

பாண்டு முதற் பற்றியுள்ள பார நோய்கள் தீரும்
ஆண்டி முத லெல்லாவர்க்கும் ஆகுமிது தேரும்

என்று நமக் காசிரியர் இன்பமுறச் சொன்னதெலாம்
இன்று நுமக் கெடுத்துரைத்தேன் ஏகுவம் வாரிரே.

**- க. அழகரத்தினம்**



# சின்ன வீரன்

நானோர் சின்ன வீரன் தானே
எனது திறமை கேளடி மானே.

ஓட்டைப் பானை ஒன்றைக் கண்டேன்
உள்ளோ ரெலியும் நுழையக் கண்டேன்.

பானையுட் கையை விட்டுக் கொண்டேன்
பதுங்கிய எலியைப் பிடித்துக் கொண்டேன்.

கையை எலியும் கடித்து விட்டது
கதறி நானும் கையை விட்டேன்.

எலியோ துள்ளி உயரப் பாய்ந்தது
எட்டாப் பரணுள் குதித்து மறைந்தது.

கோபம் மறைந்தது முகமும் சிவந்தது
கொட்டன் கொண்டு பானையை உடைத்தேன்.

கொட்டன் ஒடிந்தது குடமும் உடைந்தது
கோட்டை வெடிபோல் சத்தமும் எழுந்தது.

ஐயா அங்கே ஓடி வந்தார்
அடுத்து ஐந்தடி எனக்குத் தந்தார்.

நானே அழுதேன் அம்மா வந்தார்
நாலு ஏச்சும் எனக்குத் தந்தா

நானோர் சின்ன வீரன் தானே
எனது திறமை கேளடி மானே.

- யாழ்ப்பாணன்

# பாட்டி அழுகின்றாள்

சிறிய பூச்சி பிடிக்கவே
பெரிய பல்லி ஊர்ந்தது

பெரிய பல்லி பிடிக்கவே
கரிய பூனை பதுங்கிற்று

கரிய பூனை பிடிக்கவே
வெள்ளை நாயும் பாய்ந்தது

வெள்ளை நாயைத் துரத்தவே
மெள்ளப் பாட்டி எறிந்தனள்

பாட்டி எறிந்த தடியினால்
பானை சட்டி உடைந்ததே

காட்டிக் காட்டி அழுகிறாள்
கவலை தீர்ப்பார் இல்லையே.

- கனக. செந்திநாதன்

## காய்கள் கட்டிய வெருளி

கந்தன் செய்த தோட்டத்தில்
காய் கனிகள் அதிகமாம்
வந்து ஆடு மாடுகள்
வளர்ந்த வற்றைக் கடிக்குமாம்

காய்கள் ஒன்று கூடியே
காக்க வெருளி கட்டின
வாய்கள் திறந்து பேசின
வழி வகுத்துக் கொண்டன

சாம்பல் நீற்றுப் பூசினி
தலைக்கு வருவேன் என்றது
பாம்பு போன்ற புடலங்காய்
பக்கக் கைகள் என்றது

பானை போன்ற பூசினி
பருத்த வயிறு என்றது
ஆனை மிள காய்களும்
அழகு மூக்காய் ஆகின

வெண்டிக் காய்கள் தாங்கள் தாம்
விரல்கள் என்று தொங்கின
நொண்டிக் கால்கள் ஆயின
நுனி வளர்ந்த கரும்புகள்

கனிந்த நிறத் தக்காளி
கன்னம் என்று நின்றது
நனைந்த பயற்றங் காய்களும்
நாலு மயி ராயின


முறுக்கு மீசை இல்லை என்று
முணு முணுத்துக் கொள்ளவே
நறுக்கி வைத்த அறுகம்புல்
நானி ருப்பேன் என்றது

கண்ணில் லாத வெருளி என்ற
காய்கள் கவலை கொண்டன
அண்ணன் நாவற் பழவனார்
அதற்கு வந்து குந்தினார்

மாடு வந்து பார்த்தது
மனிதன் மீசை கண்டது
நாடு காடு தாண்டியே
நாலு காலிற் பாய்ந்தது.

**- க. சச்சிதானந்தன்**

# செய்மதிகள்




உலகம் சிறு பெட்டிக்குள்ளே
ஒடுங்கிப் போச்சுது
உருளும் ஒரு 'சுவிட்சுப்' போட
உலகம் தெரியுது

சிங்கப் பூரின் கட்டிடங்கள்
எட்டிப் பார்க்குது
சிங்கம், புலி, யானை எல்லாம்
வீட்டுக்குள் வருகுது

அண்ணன் சீமை நாட்டில் நின்று
நேரே பேசுகிறார்
வண்ணச் சோலை சின்னத் திரையில்
வந்துபோகுது

செய்மதிகள் வானில் சுற்றி
வலம் வருகுதாம்
செய்திகளை உலகம் எங்கும்
ஒளிபரப்பு தாம்.

**- தில்லைச் சிவன்**




# பலகாரம்

அண்ணா அக்கா பலகாரம்
ஆச்சி தந்த பலகாரம்
இ. ஈ. உ. ஊ என்றதால்
எனக்குத் தந்த பலகாரம்

அண்ணா அக்கா வாருங்கோ
ஆச்சியிடம் ஓடுங்கோ
இ. ஈ. உ. ஊ என்னுங்கோ
இனிய பலகாரம் தின்னுங்கோ.

**- எஸ். இ. கமலநாதன்**





# பாசம்

பாலன் என்ற பையனுக்குப்
பாட்டி பணம் தந்தாள்
பாலன் கடைக் கோடிவடை
வாங்கிக் கொண்டு வந்தான்

கொண்டு வந்த வடையினிலே
கொஞ்சம் கிள்ளித் தின்றான்
கண்ட தங்கை ஓடிவந்து
கையை நீட்டி நின்றாள்

பங்கிடுவோன் போலதனைப்
பாதி யாக்கிக் கொண்டான்
தங்கைக்கொரு பாதியென்று
சொல்லி யொன்றை உண்டான்

மற்றப்பங்கை வாங்குவதற்குத்
தங்கை கரம் நீட்டப்
பற்றில்லாத பாலன் நீட்டிக்
கொடுக்கா தேய்த்துக் காட்ட

பையனது வஞ்சனையைப்
பார்த்த தொரு காகம்
கையைக்கீறி வடையதனைக்
கௌவிக் கொண்டு போக

கையிற்காயம் கண்டுபாலன்
கண்கலங்க நின்றான்
ஐயையோவென் றழுதுதங்கை
அவனைத் தேற்றி நின்றாள்.

- கதிரேசன்

# பலூன்

வண்ண வண்ணப் பலூன்கள்
வடிவு கொண்ட பலூன்கள்
கண்ணை அள்ளும் பலூன்கள்
கடைகள் எங்கும் பாரீர் !

சிவப்பு நீலம் மஞ்சள்
சிறுவர்க் கான பச்சை
உவப்பு ஓங்கும் ஊதா
ஊத நிறம் ஊதும் - வண்ண

பாம்பு போலே சிலது
பறவை போலே சிலது
தேம்பி அழும் குழந்தை
திகைப் படையும் பலூன்கள் - வண்ண

பலூன்காரன் வருவான்
பாட்டி வாங்கித் தருவாள்
பள்ளித் தோழரோடு நான்
பறக்க விட்டுப் பாடுவேன் - வண்ண

வாயில் வைத்து ஊதி
வான வெளியில் விட்டால்
பாயும் அங்கு மிங்கும்
பந்து போலே அடிப்பேன் - வண்ண

அளவு மிஞ்சி ஊதினேன்
அது வெடித்துப் போச்சுதே
அழகில் மிக்க ஆசை
அடடா அதுவே தீமை. - வண்ண

- க. வீரகத்தி (கவீ)


# எறும்புகள்


தம்பி : எறும்புகளே எறும்புகளே
எங்கே போகிறீர்? - புகை
இரதம் போல நீங்கள் சேர்ந்து
எங்கே போகிறீர்?

எறும்பு : சோம்பேறியாய் வீட்டினுள்ளே
இருக்க முடியுமா? உண்ண
உணவு தேடிச் சுறுசுறுப்பாய்
ஓடிச் செல்கிறோம்.

தம்பி : பாடுபட்டு உழைப்பது தான்
நல்ல தல்லவா? - எனக்குப்
பாடமொன்று சொல்லித்தந்தீர்
நன்றி சொல்கிறேன்.

- எம். ஸீ. எம். ஸுபைர்






# பாரதி பாட்டு

பாட்டு நல்ல பாட்டு - சின்னப்
பாலர் பாடும் பாட்டு
பாட்டி என்னை வீட்டில் - தினம்
பாடச் சொல்லும் பாட்டு

பாலும் பழமும் சேர்த்து - அதில்
பாகும் தேனும் வார்த்து
பாப்பா என்னைப் பார்த்து - பாடிப்
பருகத் தந்த பாட்டு

பாப்பா பாப்பா என்று - கவி
பாரதி பாடிய பாட்டு
பாடப் பாடக் கேட்டு - எங்கள்
பாட்டி மகிழும் பாட்டு.

- ஆரையூர் அமரன்



# சாப்பிடவா

சின்னக் கண்ணே சாப்பிடவா
சிங்காரக் கண்ணே சாப்பிடவா

வண்ணக் கிளியே சாப்பிடவா
வான வில்லே சாப்பிடவா


கிண்ணம் நிறையச் சோறுண்டு
கிள்ளை மொழியே சாப்பிடவா


எண்ணம் நிறைய ஆசையுண்டு
இனிய அமுதைச் சாப்பிடவா

பவளம் போன்ற வாயாலே
பேசிப் பேசிச் சாப்பிடவா

தவழும் உன்றன் கால்களினால்
தத்தி வந்து சாப்பிடவா.

**- சாரணா கய்யூம்**





# தாத்தா

தாத்தா என்தன் ஆசைத் தாத்தா
தங்க மான நேசத் தாத்தா
பார்த்தாற் பொக்கை வாய்க்குள் ளேதான்
பாக்கு வெற்றிலை குதப்பும் தாத்தா

பல்லுக் கழன்ற பொக்கை வாயாற்
பலமுத் தங்கள் கொடுக்குந் தாத்தா
பொல்லுப் பிடித்துக் குடுகு டென்னப்
போயிலை வாங்கப் போகும் தாத்தா

கட்டி அணைத்து முத்த மிட்டுக்
கதைகள் பலவுஞ் சொல்லுந் தாத்தா
விட்டி டாமல் எங்கள் பழைய
வீர மெல்லாஞ் சொல்லுந் தாத்தா

முறுக்குச் சீடை தின்ன மாட்டார்
முற்றத் திலே விடவும் மாட்டார்
தறுகு றும்பு செய்த போதுந்
தடியால் எம்மை அடிக்க மாட்டார்

ஆசைத் தாத்தா எங்கள் தாத்தா
அருமை யான நேசத் தாத்தா
பாச மெல்லாம் எங்கள் மீதே
பதித்து எம்மை வளர்க்குந் தாத்தா.

- குறமகள்

# ஆக்கிமீடீஸ்

மன்னன் சைராக் கியூஸ்நாட்டான்
மாற்றுக் குறையாப் பொன் கொடுத்து
புன் செய் கொல்லன் ஒருவனிடம்
'புதிய முடிநீ செய்' என்றான்

நாட்கள் செல்ல முடியோடு
நாடி வந்தான் பொற் கொல்லன்
தோட்டம் செய்யப் பேரரசன்
நொடியில் கலப்பை உணர்ந்திட்டான்

ஆக்கிமிடீஸ் எனும் பெயர் கொள்
அறிவு மிக்க பெரியோனை
நோக்கி வேந்தன் 'ஐயமிதை
நீக்க வழிகாண்' என உரைத்தான்

முடியின் தூய்மை கண்டறிய
முடிவு காலம் வகுத்திட்டான்
முடிவு காணா விட்டால் யான்
முடிப்பேன் உனது வாழ் வென்றான்

அல்லும் பகலும் ஆராய்ந்தான்
ஐயம் தீர்க்க வழி காணான்
மெல்ல ஒருநாள் நீர்த் தொட்டி
இறங்கி ஆழ்ந்து மூழ்கினனே

மூழ்கி எழுந்த விஞ்ஞானி
கண்டேன் கண்டேன் எனக்கூவி
வீழ்ந்தான் எழுந்தான் வீதி யெல்லாம்
வேகமாக ஓடினனே

பொருளை நீரில் அமிழ்த்துகையில்
பொருளைத் தாக்கும் மேலுதைப்பு
பொருளால் பெயர்ந்த நீர் நிறைக்குப்
பொருந்தும் என்னும் விதி கண்டான்

கண்டவிதியின் அடிப்படையில்
கண்டான் முடியில் கலப்பிடுத்தல்
கண்ட முடிவை அரசனிடம்
கணத்தில் உரைத்தான் பரிசு பெற்றான்.

**- ஆடலிறை**

# விருந்து

குஞ்சே குஞ்சே வா வா வா


குஞ்சே குஞ்சே வா வா வா
கோழிக் குஞ்சே வா வா வா
அஞ்சா திங்கே வா வா வா
அரிசி பொறுக்க வா வா வா

பற்றைக்குள்ளே மறைவினிலே
பருந்துக் கஞ்சிப் பதுங்கிடவே
கற்றுத் தந்ததார் சொல்வாய்
கலங்கா தென்முன் வா வா வா (குஞ்சே)

காகம் பற்றும் பூனை கவ்வும்
கள்ளப் பாம்பு கவர வரும்
சோகங் கொண்டு பதறாதே
தொடர்ந்து காப்பேன் வா வா வா (குஞ்சே)

உன் தா யுன்னைச் சிறகுள்ளே
உருகி யணைக்குஞ் சீர் கண்டேன்
உன் தாய் போலுந் தாயுண்டோ
உவந்து காப்பேன் வா வா வா. (குஞ்சே)

- மு. நல்லதம்பி



# அம்மாவின் அன்பு

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா


புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கி
தோளிற் போடும் அம்மா

பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா.

**- க. வேந்தனார்**



# ஆசை அம்மா

அம்மா ஆசை அம்மா
அன்பு காட்டும் அம்மா
சும்மா தன்னும் கோபம்
கொள்ள மாட்டா அம்மா

நல்ல உணவு தந்து
நாளும் காக்கும் அம்மா
செல்லப் பிள்ளை என்று
சேர்த்துக் கொஞ்சும் அம்மா

அழகுச் சட்டை போட்டு
'அச்சா' என்னும் அம்மா
நிலவைக் காட்டிக் காட்டிச்
'சோச்சி' தீத்தும் அம்மா.

**- பா. மகாலிங்கசிவம்**

# அடிமை வாழ்வு

வானம் பாடிக் குருவியொன்று
வயலில் முட்டை யிட்டதடா
கானம் பாடிப் பறந்ததடா
கவலை யற்று வாழ்ந்ததடா

ஏனோ ஒரு நாள் ஒரு சிறுவன்
எண்ணி யேதும் பாராது
நானே உன்னை வளர்க்கின்றேன்
நல்ல உணவு தருகின்றேன்

தீனைத் தின்று கொழுத்திடலாம்
தினமும் மகிழ்ச்சிப் பட்டிடலாம்
வான மழைக்குத் தப்பிடலாம்
வறுமை யின்றி வாழ்ந்திடலாம்


என்று ஆசை காட்டியவன்
இருந்த குருவி முட்டையெலாம்
கொண்டு வீட்டில் வைத்தவுடன்
குருவி அடையும் காத்ததடா

பூனை யொன்று வந்ததடா
புதுமை யிதனைக் கண்டதடா
நானே உன்னை உண்கின்றேன்
நல்ல உணவு என்றதடா

குருவி பறக்கப் பார்த்ததடா
        கூடு முட்டித் தடுத்ததடா
வருவோர் போவோர் ஆசைவழி
        வலிந்து சாகும் வாழ்விதடா

என்றே குருவி தவித்ததடா
        இரக்க மற்ற பூனையதோ
தின்று ஆசை தீர்த்ததடா
        தெரியா அடிமை வாழ்விதடா.

**- திமிலைக் கண்ணன்**



# தவளைக் கூத்து

டும் டும் மழை மழை டும் டும்
கும் கும் தவளைகள் கும் கும்

சல்லரி நான்கு மத்தள மேழு
தவிலும் சேர்ந்தே டும் டும்
மெல்லென வீங்கும் புல்லாங்குழலும்
வீணையும் சேர்ந்தே கும் கும் கும்

குப்பை மிதந்திடும் பள்ளத்தி லேயொரு
கூத்து நடக்குது தெய் தெய் தெய்
செப்பு நெருஞ்சியும் வட்டத் தகரையும்
சீலை விரிக்குது மெய் மெய் மெய்

பச்சைத் தேரை பிடில் வாசிக்க
பனைமரத் தேரை குழலூத
மொட்டைத் தவளை நாட்டிய மாட
மோசங்கு கேட்குது ஞொய் ஞொய் ஞொய்

கொட்டும் மழையும் தாளம் போடக்
குளிரும் காற்றும் கவிபாட
பொட்டல் தரையில் தவளைகள் சேர்ந்தே
போடுது கூத்து தெய் தெய்.

- **திமிலைத்துமிலன்**

# புள்ளிப் புள்ளி மானே

என்ன மாமா - பச்சரிசி பச்சரிசி
என்ன பச்சை - வெள்ளைப் பச்சை
என்ன வெள்ளை - பால் வெள்ளை
என்ன பால் - எருமைப் பால்
என்ன எருமை - காட்டு எருமை
என்ன காடு - கட்டைக் காடு
என்ன கட்டை - கொழுக் கட்டை
என்ன கொழு - கலப்பைக் கொழு
என்ன கலப்பை - உழவு கலப்பை
என்ன உழவு - கோடை உழவு
என்ன கோடை - பூக் கோடை
என்ன பூ - வெள்ளைப் பூ
என்ன வெள்ளை - மா வெள்ளை
என்ன மா - மாமா

- திமிலை மகாலிங்கம்

# எங்கள் அம்மா

பாலைத் தந்து படுக்கை விரித்துப்
பக்கத்திலே படுத்து
காலைக் கையை மூடி மூடிக்
காக்கும் எங்கள் அம்மா

எண்ணெய் வைத்து நீரும் ஆட்டி
இனிய பவுடர் போட்டு
சின்ன உச்சி எடுத்தும் பொட்டு
சிறப்பாய் வைக்கும் அம்மா

காகம் குருவி கன்று நாயைக்
காட்டி உணவு ஊட்டித்
தாகம் தீர நீரும் தந்து
தடவிக் கொஞ்சும் அம்மா

அம்மா போல அன்பு காட்ட
ஆரா லேதான் முடியும்
சும்மா தும்மி னாலும் கூடத்
துடித்துப் போவாள் அம்மா.

**- வித்துவான் சி. குமாரசாமி**



## சட்டை

பட்டுப் புதுச் சட்டை
பள பளக்கும் சட்டை
இஷ்டம் போல நாமும்
இட்டுக் கொள்ளும் சட்டை

அப்பா துணி வாங்க
அம்மா தைத்த சட்டை
இப்ப தைத்த சட்டை
இனிய பட்டுச் சட்டை

நாளை மறு நாளை
நாங்கள் கோவில் போகும்
வேளை தன்னில் நானும்
விரும்பிப் போடு வேனே

கண்ணன் என்னைப் பார்ப்பான்
கம்பீரமாய் நானும்
வண்ண நடை போட்டு
வடிவு காட்டுவேனே

ஆரு தைத்த தென்றே
அனை வருமே கேட்பர்
பேரைச் சொல்ல மாட்டேன்
பிரிய அம்மா என்பேன்.

**- இ. நாகராஜன்**

# அழகு நிலா!

நீல வானில் எழுந்து எழுந்து
நீந்தும் அழகுப் புது நிலா
கோல எழிலை அள்ளி எங்கும்
கொட்டிச் சிந்தும் விந்தை பார் !

உள்ளக் கமலம் தன்னில் எதையும்
ஒளித்து வையா எழில் நிலா
பிள்ளை மனது கொண்டு ஒளியைப்
பெய்து எங்கும் செல்குதோ !

– ச. அமிர்தநாதர்

# யானைத் தாத்தா

சுளகுச் செவியை
அசைத்து அசைத்து
யானைத் தாத்தா
வருகிறார்.

தும்பிக்கையைத்
தொங்க விட்டு
யானைத் தாத்தா
வருகிறார்.

சுவரைப் போன்ற
உடம்பைத் தூக்கி
யானைத் தாத்தா
வருகிறார்.

தோளில் எம்மை
ஏற்றிப் போக
யானைத் தாத்தா
வருகிறார்.

- கல்வயல் வே. குமாரசாமி

# தோட்டம்

வீட்டிலே நாம் போட்ட தோட்டத்தில்
வெண்டி பூத்துக் காய்த்தது
தக்காளி காய்த்துப் பழுத்தது
வெள்ளரி பழுத்து வெடித்தது.

மாட்டின் சாணம் எருவாயிட்டு
மாமா தண்ணீர் ஊற்றினார்
மாமா களையைப் பிடுங்கினார்
மாமா மண்ணைக் கிளறினார்.

நாட்டில் எல்லோரும் தோட்டம் போட்டால்
நலிக்கும் வறுமை ஓடுமே
நமது சோம்பற் தீருமே
நல்ல உணவு கிடைக்குமே.

**- ஈழத்துப் பூராடனார்**

# கப்பல் விற்றான் கொட்டை

ஒட்டு முந்திரிக் கொட்டை
ஒற்றைக் கண் போல் நெட்டை
சுட்டுத் தட்டினால் ரெட்டை
மட்டக் களப்பு கொட்டை

உள்ளே இருக்கும் பருப்பு
உண்ண உண்ண விருப்பு
தின்னத் தின்ன ருசிப்பு
தின்றால் அதிகம் தவிப்பு

தண்டு கொய்து அறுத்து
தண்ணீர் கொசுவி அவித்து
அம்மா கறியும் சமைப்பாள்
அடடா என்ன சுவைப்பு

வித்து எங்கள் சொத்து
விற்றுப் பணத்தைப் பெற்று
நல்ல பொருள் நாம் சேர்ப்போம்
நன்கு பயிரை வளர்ப்போம்.

- நாகூர் பாவா

# புதுவித மனிதர்

நாங்கள் புதுவித மனிதகுலம்
இயந்திர வடிவில் பிறந்த இனம்

றோபோ என்பது எங்கள் பெயர்
மின்வலு அதுவே எங்கள் உயிர்

இரத்தமும் தசையும் எமக்கில்லை
இருதயம் என்பது எமக்கில்லை

கணினி என்கிற பெயரினிலே
அதிசய மூளை நமக்குண்டு

கணினிகள் தருகின்ற வேலைகளைக்
கச்சிதமாய் நாம் செய்கின்றோம்

இரும்பைக் கடைந்து வெட்டுகிறோம்
எரி வாயுவினால் ஒட்டுகிறோம்

அழகாய் வர்ணம் தீட்டுகிறோம்
ஆணிகள் எடுத்துப் பூட்டுகிறோம்

பிளாஸ்ரிக் பொருள்கள் ஆக்குகிறோம்
வேண்டாப் பொருள்களை நீக்குகிறோம்

பொருள்களைச் சரையாய்ச் சுற்றுகிறோம்
பொதிகளை வண்டியில் ஏற்றுகிறோம்

களைப்பும் சோர்வும் இல்லாமல்
உழைக்கும் மனிதர் நாங்கள்தான் !

- வ. இராசையா

# மரம்

நிலத்தில் காலை ஊன்றி
நிற்கும் அந்த மரந் தான்
பலத்த காற்றைக் கண்டும்
பயமே கொள்வதில்லை

தலையின் மீது பூக்கள்
தங்கை அவளைப் போல
இலைகள் நீள மாகும்
எங்கள் கைகள் போல

சின்னச் சின்ன மொட்டு
செவியில் தோடு போல
பென்னம் பெரிய காய்கள்
பிடுங்கித் தின்னலாமே

வட்ட மான பழங்கள்
வாயை ஊறச் செய்யும்
எட்டிப் பிடுங்க லாமோ?
ஏற வேண்டும் தம்பி

மழை பொழியச் செய்யும்
மரம் வளர்க்க வேண்டும்
நிழல் மரங்களாலே
நிலம் குளிர்ந்து போகும்.

**- வாகரை வாணன்**

# ஆறுமுகநாவலர்

ஆறுமுக நாவலரே
உனக்குத் தெரியுமா?
அரிய தமிழ்த் தலைமகனின்
பெருமை புரியுமா?

அறிவுக்கடல் தனை அளந்து
ஆழங் கண்டவர்
அன்பு மலை போலுயர்ந்து
ஞானங் கொண்டவர்

செந்தமிழும் சைவமுமே
கண்ணாய்க் காத்தவர்
சேவையெனும் புனிதமான
செல்வம் சேர்த்தவர்

நல்லதமிழ் வசனநடை
நாட்டிக் காட்டினார்
நாவலனார் எனும் புகழை
நாட்டில் ஈட்டினார்.

- யாழ். ஜெயம்

# எண் பாட்டு


ஒன்றும் ஒன்றும் (இ)ரண்டு
ஊதிப் பறக்கும் வண்டு
இரண்டும் ஒன்றும் மூன்று
எங்கள் விரலைப் போன்று

மூன்றும் ஒன்றும் நாலு
முன்னே செல்வான் வேலு
நாலும் ஒன்றும் ஐந்து
நாம் அடிப்போம் பந்து

ஐந்தும் ஒன்றும் ஆறு
அம்மா தருவாள் சோறு
ஆறும் ஒன்றும் ஏழு
ஆச்சி குடிப்பாள் கூழு

ஏழும் ஒன்றும் எட்டு
எனது சட்டை பட்டு
எட்டும் ஒன்றும் ஒன்பது
எண்ணத் தெரியும் ஐம்பது
ஒன்பதும் ஒன்றும் பத்து
ஓடிப் போகிறான் முத்து.

- வெற்றிவேல் விநாயகமூர்த்தி



# பறவைக் கப்பல்

பறபறபற பறபறபற
பறவைக் கப்பலே
பயங்கரமாய் இரைச்சலிட்டுப்
பறக்கும் கப்பலே

இறகும் வாலும் பறவை போல
இருக்கும் கப்பலே
இங்கிருந்து செல்வதெங்கே
சொல்லு கப்பலே

விசிறி சுற்றி வேகமாக
விரையும் கப்பலே
வீடு போல உள்ளிருப்போர்
மகிழும் கப்பலே
பொங்கி எழும் மகிழ்ச்சியிலே
போகும் கப்பலே
இங்குபாலர் பாட்டைக் கேட்க
இறங்கி வாராயோ !

- வை. இளையதம்பி

# நிலா

வட்ட நிலா வா வா
வண்ண நிலா வா வா
பட்டு நிலா வீசி வா
பாடுகிறேன் ஆடி வா

வெள்ளி நிலா வா வா
விண் வெளியில் ஆடி வா
அள்ளி நிலா வீசி வா
ஆடுகிறேன் ஓடி வா

தேன் நிலாவே வா வா
தேய்ந் திடமுன் வாவா
ஏன் தயக்கம் ஓடி வா
என்னுடனே ஆடவே.

- அம்பி

## நாலு வயது வாத்தியார்

நானே நல்ல வாத்தியார்
ஆனால் வயது நாலு தான்

கிளுவை எனது மாணவன்
புளியும் எனது மாணவன்

கப்பும் எனது மாணவன்
கொப்பும் எனது மாணவன்

பாடஞ் சொல்வேன் சொல்லார்கள்
மூடர் என்று திட்டுவேன்

தடி எடுப்பேன் கையிலே
அடி கொடுப்பேன் முதுகிலே

நானே நல்ல வாத்தியார்
ஆனால் வயது நாலு தான்.

- ச. வே. பஞ்சாட்சரம்

# ஆமையாரின் வீடு

வீடு நல்ல வீடு
மெல்ல அசையும் வீடு
ஓடு போட்ட வீடு
உடையா தந்த வீடு

நாலு காலில் வீடு
நதியில் நீந்தும் வீடு
வாலுந் தலையும் நாலு
காலும் உள்ள வீடு

கதவு யன்னல் இல்லை
காற்று ஒளியும் இல்லை
உறவு பேசி யாரும்
உள்ளே வருவதில்லை

பெருமை பேசி உள்ளே
ஒருவர் வாழுகின்றார்
அருமையான வீடு
ஆமையாரின் வீடு.

- சி. கார்த்திகேசு (சேந்தன்)

# ஈழநாடு

மாங்காய் வடிவமுள்ள தீவு - உலக
மாட்சிமையைப் பெற்றதொரு நாடு
பாங்காய் இயற்கை எழில் கொழிக்கும் - எங்கள்
பண்டையோர் வாழ்ந்திருந்த நாடு

பாக்குக் கடல் வடக்கில் தோன்றும் - கிழக்கில்
பார்க்கலாம் வங்க விரிகடலை
நோக்கினால் தெற்கோர மேற்கில் - மிக
நீண்ட சமுத்திரத்தைக் காண்பாய்

விண்ணைத் தொடுமுயர்ந்த மலையும் - வளைந்து
வெள்ளிக் கதிரெனப் பாயாறும்
கண்ணுக்கு இன்ப விருந்தளிக்கும் - இயற்கைக்
காட்சிகளும் கொண்டதொரு நாடு

இறப்பரொடு தேயிலைத் தோட்டம் - நன்கு
செழித்து விளங்கி நிற்கும் மலையில்
சிறந்த மர இனங்கள் மலிந்த - கானில்
சிறுத்தை கரடி இனம் வாழும்

பார்க்கும் திசையனைத்தும் களனி - உயர்ந்த
பனையென்னும் கற்பகத் தருக்கள்
சீர்மிக்க வள்ளல்கள் அன்ன - நல்ல
தென்னை மரச்சோலை சூழ்நாடு

உரிமையொடு பல்சமய மக்கள் - உயர்ந்த
ஒற்றுமை யோடிருந்தா ரென்று
சரித்திரம் கூறுமொரு சான்று - எவர்க்கும்
சாந்தம் அளிக்கும் நல்ல மருந்தாம்.

**- துறையூர் செல்லத்துரை**

## பூச்சு (சேர்ந்து பாடல்)

இலைகள் இப்போ
பச்சை பூசும்
வானம் இப்போ
நீலம் பூசும்
நெருப்பு இப்போ
சிவப்புப் பூசும்
காகம் இப்போ
கறுப்புப் பூசும்
கொக்கு இப்போ
வெள்ளை பூசும்.

- சபா. ஜெயராசா

# பந்து விளையாட்டு

பந்தடிப்போம் பந்தடிப்போம்
பாலர்கள் நாமே - வண்ணப்
பந்து விளை யாடிடுவோம்
வாருங்கள் நீரே !

தாரணி நீ பந்தை எறி
ரஞ்சி ஏந்தவே - வீணா
விழுந்த பந்தை ஓடி எடு
பிரணவ னோடே.

சோபனாவும் வாசுகியும்
ஓடி வாருங்கோ - முரளி
எறியும் பந்தை ஏந்துவதார்
கையை நீட்டுங்கோ.

**- கோப்பாய் சிவம்**

# விஞ்ஞானம்

விண்ணில் ஓடும் விமானம் பார்
விஞ்ஞானத்தின் விந்தை அது

தண்ணீர் மீது ஓடம் பார்
தானே ஆடும் அழகைப்பார்

நிலவில் மனிதன் உலவிவர
விரையும் ராக்கட் விந்தை கேள்

கரையும் காக்கைச் சகுனங்கள்
கறையே நமக்குக் கவலை விடு

சண்டைக்காக விஞ்ஞானம்
தன்னை வளர்த்துக் கெடுக்காமல்

மனிதன் வாழ வழிசெய்வாய்
மகிமை அதில்தான் நிறைவுண்டு

கலைகள் போற்றும் மதிவேண்டும்
கவலை தீர்க்கும் மருந்ததுவே

வானொலி ரீவி படக்காட்சி
வகுத்தது யாவும் விஞ்ஞானம்.

**- வளவை வளவன்**

## காலைக் குயிலே!


காலைக் குயிலே - ஒரு பாட்டு
கதிரோன் வரவைப் பாராட்டு
சோலைக் குயிலே - ஒரு பாட்டு
செங்கதிரோனைத் தாலாட்டு

தேனைப் போலே ஒரு பாட்டு
செந்தமிழாலே இசை கூட்டி
வானின் மழைக்கு ஒரு பாட்டு
வற்றா நதியைத் தாலாட்டு

பாடும் பறவை இசை கேட்டு
பாலர்கள் தூங்கத் தாலாட்டு
வாடும் பசிதீர்த் துணூட்டி
வாழும் தொழிலைப் பாராட்டு

நாட்டினர் செழிக்க ஒரு பாட்டு
நல்லோர் நிலைக்க ஒரு பாட்டு
ஆட்டிடும் அரக்கர் திருந்திடவே
அண்ணலை நினைந்து ஒரு பாட்டு.

- மட்டுநகர் முத்தழகு



# ஊர்க்குருவி சொன்ன கதை

ஊர்க்குருவி ஊர்க்குருவி
நாட்டில் என்ன சேதீ ?
நாடு மிகவும் மோசம்
நான் சொன்னாப் பாவம்

தோப்புப் பக்கம் போனேன்
தோப் பெல்லாம் இரத்தம்
குஞ் செல்லாம் செத்து
கூடு சிதைஞ்சு கிடக்கு

செத்த குஞ்சுகளுக்கு
சிலுவை குத்திச் சூட்ட
பூப்பிடுங்கப் போனேன்
பூக்களெல்லாம் இரத்தம்

பூக்கழுவ வெண்டு
வாவிக்கரை போனேன்
வாவிக்கரை யெங்கும்
வீங்கி விறைச்சுக் கிடக்கு

வீக்கமெண்ட வீக்கம்
விழி பிதுங்கும் வீக்கம்
காக்கத் துணையில்லை
கன தூரம் திரிஞ்சன்

தேசமெல்லாம் திரிஞ்சு
தோப்பின் கதை சொன்னேன்
தோப்பிழந்த குயில்கள்
துயரக் கதை சொன்னேன்

தோப்பின் கதை பொய்யோ
துயரக் கதை பொய்யோ
வாவிக் கதை பொய்யோ
வாடி மிக நொந்தேன்

நொந்த கதை சொல்வேன்
நூறு தேசம் செல்வேன்
வெந்த கதை சொல்வேன்
விடை கிடைக்கும் வரைக்கும்.

- சு. வில்வரத்தினம்

# புத்திமதி!

இன்று செய்யுங் கடமைதனை
இன்று செய்தல் நன்றுணர்
நின்று செல்வம் நாளையென்று
நீ யிருத்தல் சோர்வுணர்.

இளமை நாளில் வந்த சோர்வு
வழமையாகிப் போகு மேல்
வளமணைக்கும் வாய்ப்பினையே
வழுவி நீங்கிப் போகுமே.

ஊதுகாற்றில் அவிநெருப்பை
ஊரைக் கட்டி அணைப்பதோ?
மோது வெள்ளம் வந்த பின்னே
முட்டி மோதி ஆவதென்ன?

காலமென்னும் பொன்னதைக்
கழித்தல் நீதி ஆகுமா?
வாழ எண்ணு வாழுவாய்
வாழப் போகுஞ் செல்வனே.

- மறை முதல்வன்

# பச்சைக் கிளியே

விண்ணிலே பறந்து வரும் பச்சைக்கிளியே
விரைந்து இங்கே வந்துவிடு பச்சைக்கிளியே !
பண்ணிசைத்து மகிழவைக்க பச்சைக்கிளியே
பறந்து இங்கே வந்து விடு பச்சைக்கிளியே !

மஞ்சிலே நீ மறைந்து விட்டால் பச்சைக்கிளியே
மனதிலேக்கம் கொள்ளுகிறேன் பச்சைக்கிளியே !
அஞ்சிடவே தேவையில்லை பச்சைக்கிளியே
அன்புடனே அணைத்திருப்பேன் பச்சைக்கிளியே !

கிள்ளை மொழி பேசிய நாம் பச்சைக்கிளியே
கிளுகிளுப்பாய் இருந்திடலாம் பச்சைக்கிளியே !
கொள்ளை இன்பம் கொண்டிடலாம் பச்சைக்கிளியே
கொஞ்சி விளையாடிடலாம் பச்சைக்கிளியே !

- நமுனகுல ராஜேஸ்

## வானொலி

மலை நிறைந்த வெளியிலே
மனிதன் கூவி ஒலித்தனன்
மலையில் மோதி ஒலியலை
வந்து காதில் ஒலித்தது

மீண்டு கிணற்றுள் கூவினன்
மகிழ்ந்து துள்ளிக் குதித்தனன்
தூண்டும் அறிவு துளிர்த்தது
செயலாய் வடிவம் பெற்றது

ஒலியின் அலையை அறிந்தனன்
ஒலியைப் பதிவும் செய்தனன்
ஒலியைக் காற்றில் பரப்பினன்
ஒலிக்கப் பெட்டி ஆக்கினன்

வான் பரப்பில் ஒலியலை
வந்து வட்டம் அடிப்பதை
வான் ஒலியில் கேட்கிறோம்
விந்தை கண்டு மகிழ்கிறோம்.

- ச. அருளானந்தம்

## பார் பார் பூமிபார்

நச்சுப் பொய்கை தன்னில் வீழ்ந்து
நரகமான பூமிபார்
மிச்சமாக என்பும் ஓடும்
மிகுந்து காணும் பூமிபார் !

எந்திரத்தின் ஆட்சியாலே
எழுந்து செல்லும் வாயுபார்
சந்திரன் தன் மண்ணை யாள
சுழன்று பாயும் ஊர்தி பார் !

காட ழித்து நாடு கூட்ட
கலைந்து போன மேகம் பார்
கூட மீந்த ரசாயனத்தால்
குலைந்து போகும் சூழல் பார் !

வானம் மீதில் போர் புரிந்து
விரைந்து குண்டு போடும் பார்
தானம் மாறித் தர்மமின்றி
துகிலு ரிந்த தேசம் பார் !

ஊழல் என்றும் வஞ்சம் என்றும்
உறைந்த மாந்தர் நெஞ்சம் பார்
மீளன் இன்று நாளை என்று
மரிக்கும் ஈழ நாட்டைப்பார் !

- மாவை வரோதயன்

# அறிந்து கொள்வாய்

தீட்டு உன்னறிவைத் தீட்டு - நாளை
தெளியாரை உலகு விட்டோட்டு
காட்டு உன் எழிலைக் காட்டு
கசடர்தமை களைந்து லகிலோட்டு


பூட்டு உன்மனதைப் பூட்டு
போலிகளைப் புல்லர்களை ஓட்டு
வாட்டு உன்னகந்தையை வாட்டு
வஞ்சத் தமிழெதிரிக் கெரியூட்டு

கேட்டு அறிஞர் மொழி கேட்டு
கேட்டைத் தகர்த் தெறிய சாற்று
ஆற்று அறிவுலகை ஆற்று
அசடை முன்னின்று தூற்று

போற்று பெருந்தமிழைப் போற்று
பொதிகை தமிழெழுதிக் காட்டு
ஏற்று ஒன்றுபட்டுண்டு வாழ
இதுவே நன்றென்றெழுதிக் காட்டு

ஊட்டு செந்தமிழில் பாட்டு
உன் கொள்கைப் பெருமையைப் பாட்டு
மூட்டு உன் இனத்துணர்வை
முதுவுலகில் அறிவில் செறிவில்.

- வெண் சங்கு வேல்



# தும்பி

அங்கே பார் அங்கே பார்
எத்தனை தும்பி பறக்குது பார்
சின்னத் தும்பி, பெரியதும்பி
கறுப்புத் தும்பி, சிவப்புத்தும்பி

அங்கே பார் அங்கே பார்
எத்தனை தும்பி பறக்குது பார்
அத்தனையும் அம்மாவின்
சேலை போல அழகு தான்.

- ஆழியாள்

## சுவாமி விபுலானந்தர்

முத்தமிழ் தந்த வித்தகராய்
முது தமிழ் அறிந்த பாவலராய்
சத்திய மறையைக் காத்தவராய்
சகமிதில் வந்த ஓர் அறிஞர்

மட்டு நகரில் பிறந்தவராம்
மயில்வாக னனார் இயற்பெயராம்
சொட்டும் கவிகள் பல தந்த
சுந்தரர் விபுலானந்த ரவர்

உள்ளக் கமலம் அது வொன்றே
உரியது கடவுட்கென வோதி
தெள்ளும் தமிழில் யாழ்நூலைத்
திறமுடன் ஈந்த வித்தகராம்.

**- செல்வி பாலதேவி**


# தட்டுக் கோடு

தம்பி நாம் விளையாடப் போவோம் - ஒரு
தட்டுக்கோடுதனைக் கீறுவோம் சேர்த்து
கும்பலைக் கலைத்து வைப்போம் - இரு
குழுவாகப் பிரித்து நிற்போமே
செம்பியன் 'தாச்சி' யாமின்று - அவன்
சீறிச் சினந்துமே ஆடுவானங்கு
அம்பியின் குழு அங்கு வெளியே - இந்த
ஆனந்தன் கூட்டமே கோட்டுள் நிற்கும்

ஆட்டத்தை விளையாடு பார்த்து - தாச்சி
'யாடி' என்றவுடன் பாயுங்கள் கோட்டுள்
ஓட்டமெடுக்கின்றான் கந்தன் - அங்கே
உன்னிக் குறிக்கிட்டான் முகுந்தன்
வேட்ட நாய் போலவே சுற்றி - அதோ
வேடிக்கை காட்டுறான் தாச்சி
மாட்டிக் கொண்டானடா சுப்பு - கிட்டு
மறிக்கின்றான் சும்மா 'அளப்பிக்' குளப்பி

சுப்பண்ணன் பாய்கின்றான் விளத்தி - அட
சும்மா ஏன் அளப்பு றாய் மூர்த்தி
குப்பன் தான் அடிபட்டான் பாவம் - அவன்
குறிப்பிட்ட எல்லை விளையாடமாட்டான்
அப்பாலே வந்திட்டோம் அழகாய் - இனி
ஆனந்தன் 'உப்பென்று' பாய்வானே ஓடி
உப்பங்கே பாய்ந்தால் தான் வெற்றி - ஓடி
உதைபட்டால் ஆட்டமே மாறிவிடும் சுற்றி.

- **கலியுகன்**



# பட்டு ரோஜா

பட்டு ரோஜா பவள ரோஜா
தொட்டுப் பார்க்கத் தூண்டுதே
வட்டமிடும் வண்டு எனை
எட்டி ஓடச் செய்யுதே

பச்சை இலை கசிய இலை
பாய் விரித்துப் போடவே
கச்சிதமாய் அதிற் படுத்துக்
கபடமின்றிச் சிரிக்குதே

சின்ன இதழ் சிவந்த இதழ்
சிங்காரமாய் காற்றிலே
தன்னை யெலாம் மறந்து விட்டு
தாளம் போட்டு ஆடுதே.

**- சி. யோகேஸ்வரி**

# ரோசாவும் நேருவும்

வட்ட ரோசாப் பூவேநீ
வாடி வதங்கி இருப்பதுமேன்
இட்ட முள்ள நேருவையே
இழந்த துடிப்பின் சோகமதோ

கட்டுக் கடங்கா சோகத்தால்
கண்ணீர் வடிக்கும் பாலரையே
விட்டு நேரு சென்றதுமேன்
விளம்பு மலரே இப்போதே

நேரு எம்மைக் கண்டதுமே
நேரில் வந்து அணைப்பரே
பாரில் நாங்கள் தவித்திடவே
பறந்தார் எங்கே சொல்மலரே

நேருத் தாத்தா போலே நாம்
நேர்மை யுடனே வாழ்ந்துவிடின்
யாரும் எம்மை வெறுப்பாரோ
யாமும் அவர்போல் நடந்திடுவோம்.

- துரையர்

## பாரில் வந்து பாருங்கள்

நீல வானக் கடலிலே
நீந்தி யோடும் முகில்களே
காலமெல்லாம் நீந்தியும்
கரையைக் காணவில்லையா?


பாரந் தூக்கும் கப்பலா?
பயணம் செல்லும் வள்ளமா?
தூரம் போகுந் தோணியா?
தொடர்ந்து எங்கே போகின்றீர்?

பஞ்சு போல வானிலே
பறந்து செல்லும் முகில்களே
கொஞ்ச நேரம் இவ்விடம்
குதித்து வந்து பாருங்கள்.

அழகு பூக்கும் சோலைகள்
ஆடிப் பாடச் சாலைகள்
பழக நல்ல பாலர்கள்
பாரில் வந்து பாருங்கள்

அங்கே யாருமில்லாமல்
அநாதையாக நிற்பதேன்?
இங்கே வந்தால் சிறுவர் நாம்
இணைந்து விளையாடலாம்.

- ஆ. காமாட்சி



# பட்டம்


சின்னச் சின்னப் பட்டமாம்
சிங்காரப் பட்டமாம்
அண்ணன் செய்த பட்டமாம்
அருமையான பட்டமாம்

வட்டமான பட்டமாம்
வாலிருக்கும் பட்டமாம்
கிட்டவராப் பட்டமாம்
காற்றிலாடும் பட்டமாம்

பச்சை வண்ணப் பட்டமாம்
பறக்கும் நல்ல பட்டமாம்
அச்சமின்றிக் காற்றிலே
ஆடும் நல்ல பட்டமாம்

உயரப் போகும் பட்டமாம்
ஊசலாடும் பட்டமாம்
துயரமின்றி ஆடுமாம்
துள்ளி வானில் ஓடுமாம்.

- வேலு



# கோழிக்குஞ்சு

கத்திக் கத்தி எங்கள் கோழி
பத்து முட்டை இட்டது.


பொத்திப் பொத்தி பாதுகாத்து
எட்டுக் குஞ்சு பொரித்தது.

பஞ்சுப்பந்து போலக் குஞ்சு
கொஞ்ச ஆசை வந்தது.

பெட்டிக்குள்ளே கையை வைத்தேன்
எட்டிக் கொத்தி விட்டது.

எட்ட நின்று பார்த்தால் போதும்
என்ற புத்தி வந்தது.

**- ந. கிருஷ்ணராசா**



# குட்டி முயல்

குறுகுறுத்த கண்ணில்
கொஞ்சம் அழகு தெரியும்
துறு துறு வென விழிக்கும்
துள்ளித் துள்ளிப் பாயும்

ஓங்கி வளர்ந்த காது
உயர்ந்து நிமிர்ந்த முதுகு
தூங்கும் குட்டை வாலு
தொங்கிப் பாய்ந்து ஓடும்

பஞ்சு போன்ற மேனி
பதுங்கி வாழும் பிராணி
அஞ்சி ஒதுங்கி ஓடுவது
அழகான காட்சி

முன்னங் காலைத் தூக்கிப்
பின்னங் காலில் நின்று
எட்டிப் பார்க்குமாமே
குட்டி முயல் தானே.

- பி.பி.அந்தோனிப்பிள்ளை

# வீதி ஒழுங்கைப் பேணிடுவீர்

பள்ளி செல்லும் சிறுவர்களே
பாதை ஒழுங்கைக் கற்றிடுவீர்
பாதையின் குறுக்கே ஓடாதீர்
பார்த்து ஓரமாய்ச் சென்றிடுவீர்.

விரைந்து செல்லும் வண்டி பல
வீதியிற் சென்றிடும் பார்த்திடுவீர்
வீதியைக் கடக்க வேண்டு மெனில்
வீதி ஒழுங்கைக் கடைப்பிடிப்பீர்.

ஓடும் பேருந்தில் ஏறாதீர்
ஓடும் போது இறங்காதீர்
வீணாய் விபத்திற் சிக்காதீர்
வீதி விபத்தைப் பெருக்காதீர்.

ஊர்தி செல்லும் வீதிகளில்
ஒழுங்கை மீறல் அழகாமோ
நாளும் நினைவில் கொண்டிடுவீர்
நலமே செல்லப் பழகிடுவீர்.

- யசோதா பாஸ்கரன்

# கவனம் பாட்டி


பாட்டி கையில் வடை ஒன்றை
பதுங்கி இருந்த காக்கையார்
பறித்துக் கொண்டு செல்லவே
பாட்டி பதறிப் போனாரே
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ

என்ன பாட்டி ஏது பாட்டி
வடையைக் கையில் வைத்தீரோ
காகம் பறித்துச் சென்றதோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ

என்ன செய்வேன்
ஏது செய்வேன்
வயதும் போட்டுது
வடையும் போட்டுது
வருமுன் காக்கும்
நினைவும் போட்டுது
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ
ஐ ஐ ஐ யோ ஐ ஐ ஐ யோ

சின்னப் பிள்ளைகள் நீங்களும்
வருமுன் காத்துக் கொள்ளுங்கோ
இளவயதில் படியுங்கோ
இன்பம் அது தான் அறியுங்கோ
முதுமை வந்தால் போய்விடும்
வடையைப் போலப் போய்விடும்.

**- மலர் சின்னையா (செம்பியன் செல்வி)**



# பட்டுப் பொம்மைப் பூனையனார்

எங்கள் வீட்டுப் பூனையார்
எலி பிடிக்க மாட்டாராம்
பால் குடிக்கத் தெரியாதாம்
பரணில் ஏற அறியாராம்.

வண்ணப் பட்டி கழுத்திலே
வகையாய்ச் சுற்றித் தொங்கவே
சின்னத் தங்கை மடி மீதில்
செல்லமாகத் தூங்குகிறார்.

சாவி கொடுத்தாற் சட்டென்று
தலையைச் சாய்த்துப் பாய்கின்றார்
அம்பி கண்டு களித்திடுவான்
அழுகை தணிந்து சிரித்திடுவான்.

சீமை சென்ற சின்ன மாமா
திரும்பி வருகையில் வாங்கி வந்த
பஞ்சாற் செய்த பூனையனார்
பட்டுப் பொம்மைப் பூனையனார்.

- வைரமுத்து சுந்தரேசன்

# பாக்கு மரம்

பாக்கு மரத்தில் அணிற்பிள்ளை
பதுங்கி இருப்பதைப் பார் தம்பி
நாக்கை நீட்டி அணிற் பிள்ளை
பாக்கை நக்குது பார் தம்பி !

உயர்ந்து நிற்குது பாக்கு மரம்
ஊரைபட பார்க்குது பாக்கு மரம்
பயந்து பயந்து அணிற்பிள்ளை
பாக்கைப் பார்க்கும் பார் தம்பி !

கொத்துக் கொத்தாய் பாக்குகளை
கொண்டு நிற்குது பாக்கு மரம்
கத்தி ஓடுது அணிற் பிள்ளை
கடிதில் வந்து பார் தம்பி !

- எம். எச். எம். அஷ்ரப்

# வீதி ஒழுங்கு

பார் பார் பார் பார்
பாதையில் வாகனம் வரும் பார்

போ போ போ போ
வீதி யோரம் பார்த்துப்போ


நில் நில் நில் நில்
வாகனம் போகும் வரை நில்

செல் செல் செல் செல்
சந்தியில் கவனமாய்ச் செல்

கல் கல் கல் கல்
கல்வியை நன்கு கல்

சொல் சொல் சொல் சொல்
நல்லதை என்றும் சொல்.

- சிதம்பர பத்தினி



# சிறுவனும் புள்ளிமானும்


சிறுவன் : துள்ளித் துள்ளி விளையாடித்
துன்ப மின்றி வாழ்ந்திடவே
புள்ளி மானே வந்திடுவாய்
புல்லுந் தழையுந் தந்திடுவேன்

மான் : கூட்டில் அடைத்தே நீயூட்டும்
குழையும் தழையும் மேலாமோ?
காட்டில் திரியும் சுதந்திரத்தில்
காணும் இன்பம் தந்திடுமோ?


சிறுவன் : காட்டில் வாழும் வேடருனைக்
கண்டாற் கொன்று தின்பாரே
வீட்டில் வந்தே நம்மோடு
விருந்தாய் நாளும் வாழ்ந்திடுவாய்.

மான் : அன்புப் போர்வை அதுமூடி
அணைத்துக் கொல்லும் மனிதரிலும்
துன்பஞ் செய்ய நேர்நின்று
துரத்தும் வேடர் உயர்ந்தோரே.

**- வன்னியூர் அறமகள்**




# ஐசெக் நியூட்டன்



மரத்திலிருந்து காய்கனி - அங்கே
தரையில் விழக்கண்டே
மர்மம் விளக்கிய - மா
மனிதன் யாராம்?
மர்மம் விளக்கிய - மா
மனிதன் யாராம்?
ஐசெக் நியூட்டன் - என்ற
அறிவுடையோனே
புவியீர்ப் பென்றே - கண்டு
புகன்ற மனிதனாம்
எப்படி இப்புவி - ஆம்
எடை எனைப் போட்டதோ?
அப்படியல்லேன் - நானறி
யாததோ கடலே
என்று கூறிய - எம்
இனியன் நியூட்டனே.

**- கண்டி எம். இராமச்சந்திரன்**



# காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா காந்தித் தாத்தா
சாந்தி நிறைந்த காந்தித் தாத்தா


ராட்டை யிலே நூற்றுக் காட்டி
நாட்டை மீட்டுத் தந்தத் தாத்தா

கோட்டை யிலே சிறையிலிருந்து
கொடுமைகளை வென்றத் தாத்தா

சத்தியமே சாமி யென்று
சாகும் போதும் சொன்னத் தாத்தா

உத்த மராய் நாங்கள் வாழ
உண்மை சொல்லித் தந்தத் தாத்தா.

**- க. ச. கந்தசாமி**



## வெள்ளைக் கொக்கு

வெள்ளைச் செட்டைக் கொக்கு
மிக வெருட்சியுள்ள(து) எங்கள்
வீட்டுப் பக்கம் வந்திடாது
வெட்டியான கொக்கு
சுள்ளலான கழுத்தும் நீண்ட
சொண்டுமுள்ள கொக்கு
துரவுதேடி மீன்பிடிக்கும்
துணிவு மிக்க கொக்கு

பள்ளிக்கூடம் சென்றபோதும்
படித்திடாத கொக்கு
பாலர் நாங்கள் பாடம் கற்கப்
பயனில்லாத கொக்கு
வெள்ளம் நாட்டில் போட்டுவிட்டால்
விருப்பம்மிகக் கொள்ளும்
வெய்யிற் காலம் வந்துவிட்டால்
வேற்றிடத்தை நாடும்

வெள்ளி, செவ்வாய் கிழமையென்ற
வித்தியாச மின்றி
வேறுபொது நாட்களிலும்
மெய்சிலிர்ப்பே யற்று
பள்ள நீரைத் தேடிவந்து
பதுங்கி மீனைப் பிடிக்கும்
பாவமான செயலுக்கெல்லாம்
பயப்படாத கொக்கு

கள்ள மிக்க கொக்கு
நெஞ்சில் கபடம் மிக்க கொக்கு
காத்திருந்து பெரிய மீனைக்
கௌவு மிந்தக் கொக்கு
உள்ளம் நல்லதின்றி வெறும்
உடல் வெளுப்பாய்த் தோற்றும்
உலகில் வாழும் கயவருக்கு
உவமையாமிக் கொக்கு.

**- ஆ. லோகேஸ்வரன்**

# நாவலர் பெருமான்


நல்லூர் என்ற ஊர்தனிலே
நாவலர் பெருமான் பிறந்தனராம்
அல்லும் பகலும் தமிழிற்கே
அயரா துழைத்த பெருமானாராம்

சொல்லில் வீரம் செறிவதைப் போல்
செயலில் செய்து காட்டியவர்
பொல்லா எதிர்ப்பு பலவந்தும்
பொறுமை நிலையை நாட்டியவர்

'இலக்கணச் சுருக்கம்' போன்ற பல
இலக்கண நூல்களை வெளியிட்டார்
பலசெல் லரித்த ஏடுகளை
பலனுற நூலாய் அச்சிட்டார்

கல்லும் கரையும் பேச்சுக்களால்
கற்றோர் மனதைக் கவர்ந்த மிக
நல்லவர் சைவம் தமிழ் காத்த
நாவலர் தம்மை மறவோமே.

**- ராஜம் புஷ்பவனம்**



## எங்கள் பாடசாலை

பாலர் நாங்கள் படித்திடும்
பாடசாலை பாருங்கள்
பாடம் நாமும் படித்திட
பாடசாலை வாருங்கள்

பாலர் நாங்கள் கூடுவோம்
பரந்த வெளியில் ஆடுவோம்
பாலர் சுத்தம் பேணுவோம்
பலரும் புகழ வாழுவோம்

குப்பை கூளம் கூட்டியே
குறித்த குழியில் கொட்டுவோம்
எப்பொழுதும் சுத்தமாய்
இருக்க நாங்கள் பழகுவோம்.

- த. துரைசிங்கம்

# பேராசை பிடித்த புள்ளு

புள்ளுப் பறந்ததடா - மீன்கள்
துள்ளிக் குதித்ததடா
அள்ளி அனைத்தையுமே - எடுக்கும்
ஆசை அதற்குவர
கள்ளத்தனமாக - புள்ளு
கடல்மேல் பறந்ததடா.

நீண்டு அசைந்திருக்கும் - அழகு
நீலக் கடலை யெல்லாம்
தாண்டப் பறப்பது போல் - புள்ளு
தாவிப் பறந்ததடா
மீன்கள் குதித்தெழும்பி - நீரில்
மீண்டும் விழுந்ததடா.

ஆசை அதிகரித்து - புள்ளு
ஆனந்தப்பட்டதனால்
ஆசைக்கொரு மீனும் - பிடித்து
ஆகாரமாக்க வில்லை
வீணாய்க் கடலெல்லாம் - அதுவும்
தானாய்ப் பறந்ததடா

தேசம் தெரியவில்லை - அதற்கு
திக்குத் தெரியவில்லை
ஆசை பிடித்த புள்ளு - கடலில்
அலைந்து தவித்த பின்பு
மீண்டும் கரைக்குவர - முடியாது
மாண்டு மடிந்ததடா.

- செ. குணரத்தினம்

# பாட்டாவும் பேரனும்


கூடி உரையாடு பாட்டா - அதில்
குறையேதும் வையாதே பாட்டா !
தாடி வெளுத்திட்ட பாட்டா - கையில்
தடியை எடுத்துக் கொள் பாட்டா !

இடித்திடு வெற்றிலை பாட்டா - தினம்
படித்திடு புராணத்தைப் பாட்டா - பக்கம்
வடித்திடு வாய்ச் சாற்றைப் பாட்டா - பக்கம்
வருபவர் மேலெல்லாம் பாட்டா !

பல்லில்லா பொக்கை வாய்ப்பாட்டா - வயதில்
பள்ளிக்கு வந்திட்டா பாட்டா !
படித்திப்போ என்னபலன் பாட்டா - போய்
படுத்திடு வீட்டிலே பாட்டா !

பேரனைப் பக்கம் வைத்துப் பாட்டா - உன்
'பாட்டி' கதை சொல்லிடு பாட்டா !
அவன் கையாலே அறைவாங்கு பாட்டா - நேரம்
பார்த்து மண்டையைப் போடு பாட்டா !

**- ஏ. பி. வி. கோமஸ்**



## கள்ள எலி

ஆருமறியா நேரத்திலே
அடங்கிய இருட்டு வேளையிலே
கூரையில் இருந்து வீட்டுக்குள்
குதித்தே வந்து பண்டங்கள்
தின்னும் கள்ள எலியாரே
தெரியுமோ எதிரே நிற்பவரை?

மீயாவ் மீயாவ் என்பவர்தான்
மீசை கனக்க உள்ளவர்தான்
பதுங்கிப் பாய்ந்து உன்னைத்தான்
பிடித்துத் தின்ன வந்துள்ளார்
சாகப் போறாய் கணப் பொழுதில்
சமர்த்து இருந்தால் தப்பிக்கொள்

காயைக் கனியைத் தின்றாயோ?
களவு செய்ய வந்தாயோ?
தேங்காய் தின்ற பல்லெல்லாம்
தெறிக்கப் போகுது பொறுத்துப்பார்
தாயைத் தந்தையை வணங்கிக்கொள்
தப்பிப் போக மாட்டாய் நீ

சிமிட்டிக் கண்ணை உருட்டாதே
சீனி அப்பம் தின்றாயோ?
வாயை வாயைச் சப்பாதே
வாழைப் பழம் நீ உண்டாயோ
வயிறு புடைத்துக் கொண்டாயோ
வெளியே வந்திட முடியாதோ?

அங்கும் இங்கும் ஓடாதே
அவஸ்தைப் பட்டுச் சாகாதே
தீங்கு எதுவும் மனிதருக்குத்
தெரியாமலும் நீ செய்யாதே
மன்னித்து விட்டேன் தப்பிப்போ
மனதைத் திருத்தி வாழ்ந்துக்கோ.

- வி. த. குமாரசாமி

# மழையே! மழையே!


மழையே மழையே வருவாயே
மனதில் மகிழப் பொழிவாயே
தழையும் செடியும் செழித்திடவே
தரணிக் கழகு தருவாயே

வறுமை சிறுமை இல்லாது
வற்றாச் செழுமை பகிர்வாயே
பொறுமை இல்லா வெய்யிலினை
போக்கிக் குளுமை தருவாயே

கிணறும் குளமும் நிறைந்திடவே
கீண்மை மேன்மை பாராது
குணமாம் நேர்மை மேற்கொண்டு
குடிகள் மகிழப் பொழிவாயே !

தாய்மைக் குவமை நின்பணியே
தரணி புகழும் நற்பணியே !
வாய்மை போற்றி உழவரெல்லாம்
மகிழப் பொழிவாய் மழையே நீ !

- நவாலியூர் கவிராயர்



# தவளையும் சிறுமியும்

தத்தித் தத்தித் தவளையாரே எங்கே போறீர்
தண்ணீர் தேடிப் போகின்றீரோ தவளையாரே
புத்திகெட்ட தவளையாரே போகவேண்டாம் - இந்தப்
புல்லுக்குள் பதுங்கிக் கொள்ளும் தவளையாரே


கொத்தித்தின்னக் காக்கையுன்னைத் தவளையாரே - பார்த்து
கொத்திப்போகக் காத்திருக்குந் தவளையாரே
மெத்தப் பசியோடிருக்குந் தவளையாரே - உந்தன்
மேனியை மறைத்துக் கொள்ளும் தவளையாரே

பள்ளிவிட்டுத் தம்பிவாறான் தவளையாரே - உன்னை
பார்த்ததும் அடித்துக் கொல்வான் தவளையாரே
துள்ளித்துள்ளிப் போக வேண்டாந் தவளையாரே - நான்
சொல்லும்புத்தி கேட்டிடுவீர் தவளையாரே

செல்லுதற்கு பந்தயமோ தவளையாரே - மிக
வேகமாகப் போவதேனோ தவளையாரே
சொல்லச் சொல்லப் போகின்றீர் தவளையாரே - உந்தன்
சொந்தப்புத்தி தானிதுவோ தவளையாரே

உந்தனுக்கு புத்தி சொன்னேன் தவளையாரே - அதை
உணராமல் போனீரே தவளையாரே
வந்தவினை பார்த்தீரோ தவளையாரே - இனி
வருந்திப் பயன் ஏதுமில்லைத் தவளையாரே.

- **பா. அமிர்தநாயகம்**



# குறையில் நிறை

குயிலின் குரலை ரசிக்கின்றோம்
குஞ்சு பொரிக்கத் தெரியாதே
குயிலின் இசையை மறப்பதுவோ
குறையென் றெண்ணி வெறுப்பதுவோ?


பறவை மயிலின் ஆடலிலே
பாலும் தேனும் உண்ணுகிறோம்
குரலோ இனிமை குன்றியதாற்
குறையென் றெண்ணி வெறுப்பதுவோ?

மாரித் தாய்நன் மாண்புடையாள்
மாறா தென்றும் பெய்வளெனின்
கூறத் தகுமோ துயரங்கள் ....?
குறையென் றெண்ணி வெறுப்பதுவோ?

கதிரோன் சேவை நம்தேவை
கடமை மிகவும் கொண்டக்கால்
கொதிப்பின் துயரம் தாழுவமோ?
குறையென் றெண்ணி வெறுப்பதுவோ?

குற்றம் பார்க்கிற் குவலயத்திற்
கூடிப் பழக யாருளரோ......?
குற்றம் போக்கிக் குணமூட்டிக்
குறையில் நிறைவு கண்டிடுவோம் !

- **பஸீல் காரியப்பர்**



# முயற்குட்டி

துள்ளித் துள்ளி ஓடிவரும்
துடிப்பு மிக்க முயற்குட்டி
பள்ளிச் சிறுவர் எம்மனத்தை
அள்ளிச் செல்லும் முயற்குட்டி

பதுங்கிப் பதுங்கிப் பாலர்நாம்
உன்னைப் பிடிக்க ஓடினால்
ஓடி ஒளித்துக் கொள்கிறாய்
ஒன்றும் அறியா முயற்குட்டி

அள்ளி அள்ளித் தழுவநான்
ஆசை கொண்டு வருகையில்
துள்ளித் துள்ளி ஓடாதே
துணிவு கொண்டு நின்றிடு.

**- செல்வி கு. உதயகுமார்**

# கிழமை நாட்கள்

எங்கள் வகுப்பில் புதிதாக
ஏழு பேரும் சேர்ந்தார்கள்

ஏழு பேரும் சேர்ந்தார்கள்
என்ன வென்று சொல்கிறேன்

திங்கட் கிழமை வந்தவளாம்
தேவி திருமகள் போன்றவளாம்

செவ்வாய்க் கிழமை வந்தவளாம்
செல்வி சிரித்தே மகிழ்பவளாம்

புதன் கிழமை வந்தவளாம்
புவனேஸ் புண்ணியம் செய்தவளாம்

வியாழக் கிழமை வந்தவளாம்
விமலா இரக்கம் உடையவளாம்

வெள்ளிக் கிழமை வந்தவளாம்
விஜயா அன்பு உடையவளாம்

சனிக்கிழமை பிறந்தவளாம்
சங்கரன் உள்ளம் கலங்கானாம்

ஞாயிற்றுக் கிழமை பிறந்தவனாம்
ஞானம் குணத்தில் சிறந்தவனாம்.

- கவிஞர் லிங்கதாசன்

# உணவு


நெல்லு அரிசிச் சோறு
நல்ல சத்து உள்ளது
மெல்லப் பிசைந்து உண்ணவே
மெதுவாய்த் திடமும் சேருமே

அப்பம் நல்ல அப்பமாம்
அருகில் கருகி இருக்குமாம்
நடுவில் பாலும் மிதக்குதாம்
நாவில் நீரும் ஊறுதாம்

சிக்குச் சிக்காய் இடியப்பம்
சிலந்தி வலையாய்த் தெரியுதே
பக்குவமாய் பாட்டி எடுத்து
பதமாய் உண்ணப் பார்க்கிறார்

மஞ்சள் நிறத்தில் தோசையே
மணமும் மூக்கைத் துளைக்குதே
இஞ்சி சேர்த்த சம்பலே
இன்னும் உண்ணத் தூண்டுதே.

**- ராணி சீதரன்**



# பட்டாம் பூச்சி

பட்டாம் பூச்சி பற பற
பாடிப் பாடி பற பற
சிட்டாய் நீ பற பற
சிற கடித்துப் பற பற

பூமேலே பற பற
பூரிப்போடு பற பற
காலைத் தேடிப் பற பற
கல கலப்பாய்ப் பற பற

நிறம் கற்க பற பற
நீலம், மஞ்சள், சிகப்பு, ஊதா,
கறுப்பு, வெள்ளை, நாவலென
காட்டித் தரப் பற பற

ஒன்றாய்ச் சேர்ந்து பற பற
ஒற்றுமையாய்ப் பற பற
நன்றாய் பார்க்கப் பற பற
நாம் படிக்கப் பற பற.

- மனோ பற்குணம்

## ஒன்றும் ஒன்றும் இரண்டு

ஒன்றும் ஒன்றும் இரண்டு
பம்பர் போடும் குண்டு

(இ) ரண்டும் (இ) ரண்டும் நாலு
எந்தன் சொல்லைக் கேளு

மூன்றும் மூன்றும் ஆறு
கூப்பன் அரிசிச் சோறு

நாலும் நாலும் எட்டு
அம்மா சுட்ட லட்டு

ஐந்தும் ஐந்தும் பத்து
அப்பா தந்த சொத்து.

**- மன்னார் அமுது**


# அல்வா

தின்னத் தின்ன இனிமை
தேனைப் போல இனிமை
இன்னும் தந்தால் தின்பேன்
இயன்ற மட்டும் தின்பேன்


பாகும் பாலும் சேர்த்து
பக்குவமாய்க் கிண்ட
ஆகும் நல்ல அல்வா
அம்மா தந்த அல்வா

பருப்பு வெட்டிப் போட்டு
பயறுங் குத்திச் சேர்த்தால்
விருப்புடனே உண்பேன்
வேண்டும் மட்டும் உண்பேன்.

**- மருத மைந்தன்**



# அழகு அணிலே ஓடிவா




அணிலே அணிலே ஓடிவா
அழகு அணிலே ஓடிவா
தத்தித் தத்தி பாய்ந்து
தாவித் தாவி ஓடிவா (அணிலே)

பஞ்சு போன்ற வாலும்
பட்டுப் போன்ற கோடும்
நெஞ்சைத் தொட்டு மகிழும்
நல்ல அணிலே ஓடிவா (அணிலே)

மணியைப் போன்ற கண்கள்
மணலைப் போன்ற கால்கள்
இனிமையான சந்தம்
இல்லை உனக்கு வெட்கம் (அணிலே)

பிள்ளை போல் வளர்ப்பேன்
பேசக் கற்றுத் தருவேன்
கொள்ளை இன்பம் கொண்டால்
கொய்யாப்பழமும் தருவேன். (அணிலே)

- றகுமான் ஏ. ஜபார்




## நான் யார்?


நாலு காலில் ஓடி
நாவல் மரம் ஏறி
இரண்டு காலில் இருந்து
இனிப்பெடுத்துத் தின்பார்

கூனலான மேலாம்
குஞ்சம் போன்ற வாலாம்
முதுகில் மூன்று கோடாம்
மூன்றெ மூத்திற் பேராம்

ஆற்றுமா? ஆற்றாதா?
.....................................

- **பா. சத்தியசீலன்**






# அம்மா!

அம்மா என் அன்புத் தெய்வம் - அவள்
அடியினைத் தொழுதால் உய்வம்
ஆண்டவன் ஒருவன் என்றே - பல
அறிவுரை சொல்லும் தெய்வம் !

துன்பத்தில் நானிருக்க
சுவையான கதைகள் சொல்லி
இன்பத்தில் ஆழ்த்தும் தெய்வம்
என்றென்றும் தொழுது உய்வம் !

**- ஆன்ரூபினி பிரான்சிஸ்**




# ஆமை அண்ணா

ஆமை அண்ணா ஆமை அண்ணா
ஓடி வாருங்கோ !
அடுத்த றோட்டில் வெடிச்சத்தம்
ஓடி வாருங்கோ !

ஆமி மாமா வாறாரே
ஓடி வாருங்கோ !
'ஐ டென்ரி காட்' எங்கே
தேடி வாருங்கோ !

- **கருணை யோகன்**



# திரும்பி இங்கே வருவாயோ?

எங்கள் காந்தித் தாத்தாவே
எங்கே மறைந்து போனாயோ?
திங்கள் போல இருந்தாயே
திரும்பி இங்கே வருவாயோ?

உண்மை உந்தன் உயிராகும்
உழைப்பே உந்தன் உடலாகும்
அன்பே உந்தன் மந்திரமாம்
அகிம்சை உந்தன் ஆயுதமாம்

ஏழை எளிய மக்களிலே
இறைவன் தன்னைக் கண்டாயே
கோழை சுட்ட செயல்கேட்டு
குவலயம் கண்ணீர் வடிக்கிறதே.

**- மூனாக் கானா**

(காந்தி சுடப்பட்டு இறந்த வேளையிலே பாடப்பட்டது)

## கணினிமயம்! கணினிமயம்!

கணினிமயம் கணினிமயம்
உலகமெல்லாம் கணினிமயம்
ஏகமனதாய் மனங்களெல்லாம்
புதுமை பாடும் கணினிமயம்

மின்னி னஞ்சல் அனுப்பலாம்
உண்மைச் செய்தி அறியலாம்
அண்டை வீட்டைப் போலவே
வெளிநாட்டு உறவு வைக்கலாம்

விளையாட்டு விளையாடலாம்
தொலைக்காட்சி பார்க்கலாம்
அழகின் எழுத்துக் கலைகளின்
அழகைக் கண்டு வியக்கலாம்

இணையம் இங்கு இணைவதால்
உலகம் சுருங்கி வந்ததாம்
பள்ளிச் சிறார் யாவருமே
பள்ளி யெனக் கொள்ளலாம்

கணக்கை எழுதி வைக்கலாம்
நூலும் வாசித் தறியலாம்
சிறிய நேரப் பொழுதிலும்
சிறந்த திட்டம் தீட்டலாம்

அண்ணன் படித்துத் தருவதை
நன்கு தெளிவாய்க் கவனிப்பேன்
நாட்டில் பெயரை ஈட்டிட
கணினியாளாய் மாறுவேன்.

- **இக்பால் அலி**

# அப்பம் சுடுவோம்

பணம் செலவில்லை கஷ்டமுமில்லை
பாடிச் சுடுவோம் அப்பம்

உருண்டைக் கற்கள் மூன்றை எடுத்து
ஓட்டைச் சட்டியும் வைத்து
இரண்டொரு ஓலைத் துண்டுகள் போட்டு
எடுத்தே நெருப்பை வைப்போம் (பணம்)

மண்ணைப் பிடவைத் துண்டால் அரித்து
மாடின் ஒன்றில் போட்டு
தண்ணீர் ஊற்றி பதமாய் நாங்கள்
தடியால் கலக்கிக் கொள்வோம் (பணம்)

சின்னக் கரண்டி ஒன்றை எடுத்து
சீராய் சட்டியில் ஊற்றி
ஒன்று இரண்டு மூன்றாய் அப்பம்
உடனே வெந்திடும் இங்கே (பணம்)

தம்பி வாங்கோ தங்கை வாங்கோ
தட்டை எடுத்து வாங்கோ
சும்மா தாறேன் சுடச்சுட அப்பம்
தின்றிடவே கூடாது.

- எச்.எம்.எஸ். ஷம்ஸ்



# பள்ளித் தோழர்களுக்கு


பள்ளி செல்லும் தோழர்களே ஒன்று கூடுங்கள்
பாடங்களைப் படிப்பதற்குக் கூடி வாருங்கள்
துள்ளிச் செல்லும் பசுக்கன்றாக ஓடி வாருங்கள்
தூய்மை காக்க ஒழுக்கம் பேசச் சேர்ந்து வாருங்கள் !

கள்ளம் போக்கக் கயமை நீக்கப் பறந்து வாருங்கள்
கல்விகற்று அறிஞராகக் கலந்து வாருங்கள்
உள்ளம் திருத்தி உண்மை பேசி உயர்வு காணவே
ஊக்கமுடன் ஆக்கம்பெற ஓடிவாரீரே !

புத்தனென்ற புண்ணியனைப் படிக்க வாருங்கள்
புகழ் காந்தித் தாத்தாவைக் காண வாருங்கள்
பித்தமென்ற மடைமைப் போக்கை மாய்த்து வாழவே
பேரொளியாம் வள்ளுவரைத் தேடி வாருங்கள் !

சத்தியனாம் யேசுதனைக் கண்டு போற்றவே
சஞ்சலத்தை மாற்றிடவே பாடிவாருங்கள்
உத்தமனாம் முகம்மதுவைப் பார்த்துணரவே
உண்மை பேசும் தோழர்களே உணர்ந்து வாருங்கள் !

- ஆரையம்பதி ஆ. தங்கராசா




# தட்டு தட்டு

தட்டு தட்டு கையைத் தட்டு
குட்டித் தம்பி கையைத் தட்டு

எட்டிப் பழம் இரண்டு கையில்
எறிந்து விட்டுக் கையைத் தட்டு

முட்டு முட்டு நெற்றியில் முட்டு
பட்டுக் கையால் தொட்டுக் காட்டு.


- த. கனகரத்தினம்




# பூனை

மாமா வீட்டுப் பானை
பானை மேலே பூனை
பூனை கள்ளப் பூனை
புரட்டும் தயிர்ப் பானை.

**- அகளங்கன்**





# இரும்பு மூளைப் பெட்டி

கணனி என்னும் கருவியினைக்
காட்டுவேன்நான் வாதம்பி
கவனமாக அக்கா சொல்லைக்
கேட்டு மனம் கொள்ளுவாய்
சதுரமாக இருக்குமிந்தத்
திரையினில்தான் அனைத்துமே
தெரியுமிங்கே பாரிதனைச்
சொல்வார் மௌஸ் என்றடா

எலியைப் போல இருக்குத்க்கா
எதற்குஇது கணினியில்
பலகை ஒன்றும் இருக்கிறதே
பங்கு அதற்கு என்னவோ
நினைத்ததனைத் திரையில் பதிக்கத்
தேவைஇவை விரல்களின்
துணையினோடு அனைத்தையுமே
செய்யமுடியும் அறியுவாய்

பக்கத்தில் குந்தியிருக்கும்
பெட்டி எதற்கு கூறக்கா
மிக்கபயன் கொண்ட கணினி
மூளை இது தானடா
பயனிதனால் என்ன நமக்கு
புரியும்படி சொல்லக்கா
பயன்கள் கோடி கணினியினால்
படித்துப் படித்துப் புரிந்துகொள்.

- ஜின்னாஹ்

## சின்னச் சின்னக் குருவிகள்

சின்னச் சின்னக் குருவிகள்
சிறுவர் சிறுமிக் குருவிகள் !
வண்ண வண்ணச் சட்டை போடும்
வாயாடிக் குருவிகள் !

அம்மா சொல்லைக் கேட்டு நடக்கும்
அன்புநெஞ்சக் குருவிகள் !
அநீதி கண்டு கோபம் கொள்ளும்
அதி உயர்ந்த குருவிகள் !

நாளை இந்த ஈழ நாட்டை
நடத்தப் போகும் குருவிகள் !
ஈழநாட்டின் புகழை உலகில்
ஏற்றப் போகும் குருவிகள் !

**- சி. மௌனகுரு**

# பனிவீழ்ச்சி

பூம்பனியே பூம்பனியே வா ! வா ! வா !
புதுமை புரிந்திடவே வா ! வா ! வா !
மென்மை மிளிர்ந்திடவே தா ! தா ! தா !
தண்மை மிகுந்திடவே பெய் ! பெய் ! பெய் ! (பூம்பனியே)


பள்ளம் மேவி நிரவிடவே செய் ! செய் ! செய் !
உள்ளம் குளிர்ந்திடவே பெய் ! பெய் ! பெய் !
துள்ளி விளையாடிடுவோம் வா ! வா ! வா !
அள்ளி எறிந்திடவே வா ! வா ! வா ! (பூம்பனியே)

பந்து உருண்டை செய்திடுவோம் வா ! வா ! வா !
பலர் சேர்ந்து ஆடிடுவோம் வா ! வா ! வா !
எறிந்து விளையாடிடுவோம் வா ! வா ! வா !
சறுக்கி விளையாடிடுவோம் வா ! வா ! வா ! (பூம்பனியே)

பனி மனிதன் செய்திடுவோம் வா ! வா ! வா !
தனி மனிதன் ஆக்கிடுவோம் வா ! வா ! வா !
அப்பாவின் பழைய சட்டை தை ! தை ! தை !
தப்பாமல் பொத்தான்கள் வை ! வை ! வை ! (பூம்பனியே)

தனிமனிதன் நிலைத்திடவே செய் ! செய் ! செய் !
இனி மனிதன் உருகிடான் மெய் ! மெய் ! மெய் !! (பூம்பனியே)

**- சிவபாலு**



# கீரைகளை உண்போம்

கீரை வகையைத் தினம உணவில்
சீராய்ச் சேர்த்து நாமுண்போம்
விரும்பி நாமும் கீரையுண்டால்
இரும்புச் சத்து கிடைத்திடுமே

பொன்னாங்காணி சிறுகீரை
புத்தம் புதிதாய் முருங்கையிலை
ஞானக் கீரையாம் தூதுவளை
ஞாபக சக்திக்கு வல்லாரை

காயத்தை ஆற்றும் மாம்பாஞ்சான்
தேகம் குளிரப் பசளிவகை
அகத்திக்கீரையும் நோய் போக்கும்
அதிகம் விரும்பி உண்போமே

தினமும் நாமொரு கீரைவகை
உணவில் சேர்ப்பதால் நன்மையுண்டு
மலிவாய்க் கிடைக்கும் கீரைகளால்
பொலிவாய்ச் சத்துக்கள் பெறலாமே.

- **யோகா யோகேந்திரன்**

(திருக்கோவில் யோகா யோகேந்திரனின் “மாணவர்களுக்கு மணிக்கவிதைகள்” என்னும் நூலிலிருந்து.)

# தூயவழி

போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும்
தூயவழி தவறாதே தம்பி - உலகின்
நாற்றிசை எங்கணும் நற்பெயர் எடுக்கவே
நாளும் உழைத்திடும் தம்பி.

**- மஹ்றூப் கரீம்**

# பாடசாலை போகிறோம்

அன்புத் தம்பி, ஆசைத் தங்கை
பாடசாலை போகிறோம் !

அடுத்த வீட்டுச் செல்லத் தம்பி
இணைந்து கொண்டார் சேர்க்கின்றோம் !


இன்று பள்ளிக்கூடம் தன்னில்
ஒன்றாய் நாங்கள் பாடுவோம் !

ஓட்டப் போட்டி ஊருக்குள்ளே
ஆட்டம் போடப் போகிறோம் !

வெற்றி பெற்று வென்றவர்க்கு
இன்று கூட்டம் கூட்டியே !

நல்ல பரிசு கொடுக்கும் போது
நாங்கள் கைகள் தட்டுவோம் !!

- கவிஞர் ஏ. இக்பால்



# தங்கமனசு வாத்தியார்

ஆனா சொல்லித் தந்தவர்
அன்பாய் அணைத்துக் கொண்டவர்
ஏனோ தெரிய வில்லையே
எனக்கு அவரைப் பிடித்தது

நல்லாய்ப் பாட்டுப் பாடுவார்
நமக்குஞ் சொல்லித் தருகிறார்
பொல்லுப் பிடித்த கிழவியின்
புதிய கதையுஞ் சொல்லுவார்

ஒன்று சொல்லி ஆடினார்
ஒழுங்காய் இரண்டு சொன்னநாம்
மூன்று சொல்ல முன்னராய்
முந்தி நான்கென்றுரைத்தனம்

அவரை ஆரென்றறிந்திடு
அன்பு நிறைந்த வாத்தியார்
தவறாதவரைப் பார்த்திடு
தங்க மனசு வாத்தியார்.

- இரத்தினம் அப்புத்துரை

# வீதி விதிகள்

வீதியிலே நடந்து போகும்
சின்னத்தம்பி - என்றும்
கவனமாகச் செல்ல வேண்டும்
சின்னத்தம்பி

வீதியினைக் கடக்கும் போது
சின்னத்தம்பி - என்றும்
இருபுறமும் பார்க்க வேண்டும்
சின்னத்தம்பி .

மஞ்சள் கோட்டால் நடந்து சென்றால்
சின்னத்தம்பி - என்றும்
ஆபத்தில்லை மறந்திடாதே
சின்னத்தம்பி

சந்தியினை கடக்கும் போது
சின்னத்தம்பி - என்றும்
பச்சை மனிதன் வரவேண்டும்
சின்னத்தம்பி

வீதி விதியை மதித்து நடந்தால்
சின்னத்தம்பி - என்றும்
விபத்துக்களைத் தவிர்த்திடலாம்
சின்னத்தம்பி

**வி.என்.எஸ். உதயசந்திரன்**

# கவிஞர்கள் விபரம்

**ஜே. கே. சீனித்தம்பி** : யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்; அமரராகிவிட்ட இவரின், முப்பதுகளில் கல்வி அதிகாரியாக விருந்த கே. எஸ். அருணந்தி அவர்கள் நடத்திய குழந்தைக் கவிதைப் போட்டியில் தெரிவுக்குள்ளான கவிதையே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

**சோமசுந்தரப் புலவர்**: ஈழத்தின் மரபுக் கவிஞர்களுள் முக்கியமான இவர், ஈழத்துச் சிறுவர் பாடல் முன்னோடிகளுள் முக்கிய மானவர்; நவாலியைச் சேர்ந்தவர்.

**சி. அகிலேச சர்மா**:யாழ்ப்பாணப் பிரதேசஞ் சார்ந்தவர்; முப்பது களில் நடைபெற்ற குழந்தைக் கவிதைப் போட்டியில் தெரிவுக் குள்ளான கவிதைகளுள் இவரது இக்கவிதையுமொன்று.

**மா. பீதாம்பரம்** : அமரராகிவிட்ட இவரும், முப்பதுகளில் நடை பெற்ற குழந்தைக் கவிதைப் போட்டியில் பங்குபற்றியவர்; அதில் தெரிவுக்குள்ளான கவிதையே இத்தொகுப்பிலுள்ளது. திருகோணமலையைச் சேர்ந்தவர்.

**அளவையூர் மு. செல்லையா**: "ஈழ கேசரி" காலக் கவிஞர் களுள் முக்கியமானவர்; இவரது "வளர்பிறை" நன்கு பிரபல மான தொகுப்பு.

**வெற்றிவேல் விநாயகமூர்த்தி**: ஓய்வுபெற்ற அதிபராகவுள்ள இவர், கவிதை, கட்டுரை முயற்சிகளிலீடுபட்டு, பல நூல்களின் ஆசிரியராக விளங்குபவர்.

**ச.பஞ்சாட்சர சர்மா**: மறுமலர்ச்சிக் குழுவினருள் முக்கி யமானவர்; சில வருடங்களுக்கு முன் இயற்கை எய்தியவர்.

**யாழ்ப்பாணன்** : பிரபலமான, ஈழகேசரி காலக் கவிஞர்; பருத்தித் துறையைச் சார்ந்தவர்.

**கனக. செந்திநாதன்** : மறுமலர்ச்சிக் காலத்தில் உருவானவர். சிறுகதை, நாவல் துறையில் ஈடுபட்ட இவர், ஈழத்தின் இரசனை முறை விமர்சகர்களுள் முதன்மையானவர்; குரும்ப சிட்டியைச் சேர்ந்தவர்.

**த. சச்சிதானந்தன்:** மூத்த தலைமுறைக் கவிஞருள் முக்கியமானவர். ஈழகேசரி காலத்தில் சிறந்த சிறுகதை, நாவல்கள் எழுதியவர்; இன்றும் வாழ்கின்ற இவரது பிறந்த ஊர் பருத்தித்துறை.

**தில்லைச் சிவன்:** ஐம்பதுகளிலேயே கவிதைத் துறையில் ஈடுபட்டவர்.

**வித்துவான் எஸ். இ. கமலநாதன்** : இன்று ஓய்வு பெற்றுள்ள இவர், முன்னாள் அதிபர். மட்டக்களப்புப் பிரதேச சிறுகதை, சிறுவர் இலக்கிய முன்னோடிகளுள் முக்கியமானவர். ஏட்டுருவில் வழங்கிவந்த பாரத "அம்மானை" இவரது முயற்சியால் நூலாகியுள்ளது. அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கியுள்ளது.

**கதிரேசன்:** மறுமலர்ச்சிக் கவிஞர்; இயற்பெயர் செ.கதிரேசர் பிள்ளை.

**மு. நல்லதம்பி** : கொழும்பு சாஹிராக் கல்லூரி ஆசிரியர்களுள் முக்கியமான இவர், ஈழகேசரிக் காலக் கவிஞர்.

**க. வேந்தனார்** :ஆசிரியராக விளங்கிய இவர், ஈழகேசரி காலக் கவிஞர்.

**அகளங்கன்** : வவுனியாவைச் சார்ந்த இவர், இலக்கிய நூல்கள் பலவற்றின் ஆசிரியர்; கவிஞர்; ஆசிரியர்.

**மஹாகவி** : ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளுள் முதன்மை யானவர்; அளவெட்டியைச் சேர்ந்தவர்.

**க. வீரகத்தி (கவீ)** :இலக்கணப் புலமை மிக்க ஈழத்துக் கல்விமான்; தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் இலக்கண ஆய்விலீடு பட்டு கட்டுரை சமர்ப்பித்த இவர், சிறுவர் பாடலுக்காக, ஐம்பதுகளளவில் ஜப்பான் சக்கரவர்த்தியின் விருது பெற்றவர்.

**ஆரையூர் அமரன்** :ஆரையம்பதியில் வாழ்கின்ற இவர், அறுபது களில் மொழியுணர்ச்சிக் கவிதைகள் எழுதிப் புகழ் பெற்றவர்.

**குறமகள்:** மூத்ததலைமுறை சார்ந்த சிறுகதை எழுத்தாளராகவுள்ளார்.

**ஆடலிறை:**ஐம்பதுகள் தொடக்கம் பல்வேறு இலக்கிய முயற்சி களிலும் துடிப்புடன் ஈடுபட்டு வருபவர்; மயிலங்கூடலூர் நடராஜன் என்ற பெயரினால் நன்கறியப்பட்டவர்.

**ஆரையம்பதி ஆ.தங்கராசா:**மட்டக்களப்புப் பிரதேச மூத்த தலை முறை எழுத்தாளர்; இன்றும் எழுதுபவர்.

**திமிலைத் துமிலன்:**முன்னாள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி விரிவுரை யாளர்; திமிலைத் தீவில் வாழ்கின்ற இவர், மட்டக்களப்புப்

பிரதேச மூத்த தலைமுறைக் கவிஞர்; சிறுகதை நாவலாசிரியர்; தமிழகம் நடத்திய குழந்தைப் பாடல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர்.

**தில்லை மகாலிங்கம்**: பல்துறை ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்ற இவர், மட்டக்களப்புப் பிரதேச சிறுவர் பாடலாசிரி யருள் கவனிப்பிற்குரியவர்.

**இ. நாகராஜன்** : அமரராகிவிட்ட இவர், அறுபதுகளில் ஈழத்துக் கவிதையுலகில் பிரபல்யம் பெற்று விளங்கியவர்.

**மண்டூர் மு. சோமசுந்தரம்பிள்ளை** : மட்டக்களப்புப் பிரதேச மரபுக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

**மண்டூர் தேசிகன்** : அதிபராகப் பணி புரியும் இவர், இளந் தலை முறை சார்ந்த நவீன கவிஞர்களுள் கவனத்திற்குரியவர்; மண்டூர் மு.சோமசுந்தரம்பிள்ளையின் மகன்.

**ராஜம் புஷ்பவனம்** :சில வருடங்களுக்கு முன் காலமான இவர், அறுபதுகளளவில் கவிதையுலகில் பிரவேசித்து பல்துறை முயற்சிகளில் ஈடுபட்டு வந்தவர். அடம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

**நீலாவணன்** : ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவர்; கவிதை தவிர, சிறுகதை, விருத்தாந்த சித்திரம், கட்டுரை என்பன எழுதும் முயற்சியிலும் ஈடுபட்டவர்; துறை நீலாவணை யைச் சேர்ந்தவர்.

**கல்வயல் வே. குமாரசாமி**: மரபுக் கவிதை எழுதுவதில் ஆளுமை மிக்கவர்; அறுபதுகள் தொடக்கம் எழுதி வருபவர். தற்போது ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்.

**ஈழத்துப் பூராடனார்**:ஐம்பதுகள் தொடக்கம் பல்வேறு இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இவர், கிரேக்க நாடகங்கள் உட்பட பல நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இன்று கனடாவில் வதிகின்றார்.

**நாகூர் பாவா** : மட்டக்களப்புப் பிரதேச சிறுவர் இலக்கிய முன்னோடி களுள் முக்கியமானவரான இவர்,காத்தான்குடியைச் சார்ந்தவர்,

**வ. இராசையா**: குறிப்பிடத்தக்க சிறுவர் இலக்கிய நூல்கள் பலவற்றின் ஆசிரியர்; ஐம்பதுகளிலே இவர் நடாத்திய வானொலி நிகழ்ச்சிகள், இளந்தலைமுறையாளர் பலர் உருவாக

வழி வகுத்திருந்தது. "தகவம்" இலக்கிய அமைப்பினூடாக ஆக்க பூர்வமான பணிகள் செய்தவர்.

**வாகரை வாணன் :** "போது" சிறுவர் இதழ் ஆசிரியராக விளங்கும் இவர் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை உட்பட பல்துறை களில் துடிப்புடன் ஈடுபட்டு வருபவர்.

**யாழ்ஜெயம்:** அறுபதுகளில் கவிதை உலகில் பிரவேசித்தவர்.

**அம்பி:** முன்னாள் விஞ்ஞானத்துறை ஆசிரியராகவும் அதிபராகவும் விளங்கிய இவர் அறுபதுகள் தொடக்கம், கவிதை எழுதி வருபவர். இன்று புலம் பெயர்ந்துள்ள இவர், "கிறீனின் அடிச்சுவடு" நூலினால் பிரபல்யமானவர்.

**ச. வே. பஞ்சாட்சரம்:** அறுபதுகள் தொடக்கம் கவிதை எழுதி வருபவரான இவர் சிறுகதை, நாவல் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளவர்.

**பா. சத்தியசீலன் :** ஆசிரியராகப் பணி புரிந்து காலமாகிவிட்ட இவர், முக்கியமான சிறுவர் பாடலாசிரியர்.

**செ. குணரத்தினம்:** அறுபதுகள் தொடக்கம் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என பல்துறைகளிலும் ஈடுபட்டு வருபவர். ஊர் அமிர்தகழி.

**சி. மௌனகுரு :**நாடறிந்த ஆய்வாளர்; கவிஞர்; பேராசிரியர்.

**சபா.ஜெயராசா:** இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கல்வித்துறை பேராசிரியராக விளங்குபவர். கல்வியியல் சார்ந்து பல நூல்கள் எழுதி வருபவர்; பாலர் இலக்கிய ஆக்கங்கள் தொடர்பாக உளவியல்சார் பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர். இணுவிலைச் சேர்ந்தவர்.

**கோப்பாய் சிவம் :** கவிதை, புனைகதை என பல்துறை களிலும் ஈடுபட்டு வருமிவர், மறுமலர்ச்சிக்கால எழுத்தாளரான பஞ்சாட்சர சர்மாவின் மகனாவார்.

**மட்டுநகர் முத்தழகு :** அறுபதுகள் தொடக்கம் கவிதை, சிறுகதை எழுதி வருபவர்.

**கருணை யோகன் :**கவிதைத் துறையில் பிரவேசித்த இவர், இன்று ஆய்வுத்துறையில் ஈடுபட்டு வருபவர்; கரணவாயைச் சேர்ந்தவர்.

**மூனாக்கானா** : நீண்ட காலமாக எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருபவர்; சொந்த ஊர் ஆரையம்பதி.

**எச். எம். எஸ். ஷம்ஸ்** : சில வருடங்களுக்கு முன் காலமா்ன இவர் கவிஞர்; எழுத்தாளர்; விமர்சகர்.

**ச. அருளானந்தம்** : ஈழத்தில் சிறுவர் இலக்கிய ஆக்கங்களை அதிகமாக எழுதி வெளியிட்டு வருபவர்களுள் முதன்மை யானவர்; புனைகதைகளிலும் ஈடுபாடுள்ளவர்; ஆலங்கேணி யைச் சேர்ந்தவர்.

**மாவை வரோதையன்** : மரபுக் கவிதை வடிவத்தை ஆற்றலுடன் கையாள்கின்ற கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்; இலக்கிய சர்ச்சைகளிலும் பங்கெடுப்பவர்.

**சிதம்பர பத்தினி**: தற்போது இலங்கை நிர்வாக சேவையில் உயர் பதவி வகிக்கும் இவர் சிறுகதை எழுத்தாளர், கரவெட்டியைச் சேர்ந்தவர்.

**பஸீல் காரியப்பர்** : சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல கவிஞர்.

**கவிஞர் சிங்கதாசன்** : அண்மையில் மரணமான மலையகக் கவிஞர்; ஹட்டனைச் சார்ந்தவர்.

**பஸீல் காரியப்பர்** : சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல கவிஞர்.

**மஹ்றூப் கரீம்** : நீண்டகாலமாக சிறுகதை, கவிதை, கட்டுரை என பல்துறைகளிலும் ஈடுபட்டு வருபவர்.

**கவிஞர் ஏ. இக்பால்** : ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர்; கவிஞர்; எழுத்தாளர்; விமர்சகர்.

**சு.வில்வரத்தினம்**: எழுபதுகளிலுருவான ஈழத்துக் கவிஞர்களுள் முக்கியமானவர்; சிறந்த கட்டுரைகள் பலவற்றின் ஆசிரியர் ; புங்குடுதீவைச் சேர்ந்தவர்.

**மலர் சின்னையா (செம்பியன் செல்வி)** : கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்.

**எம். எச். எம். அஷ்ரப்** : முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர்.

**வைரமுத்து சுந்தரேசன்**:யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலப் பிரிவில் ஆசிரியராகக் கடமை புரிபவர்.

**த. துரைசிங்கம்** : ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியான இவர், சிறுவர் பாடல் தொகுப்புகள் பலவற்றை வெளியிட்டவர்.

**மனோ பற்குணம்** :திருகோணமலை கல்வித் திணைக் களத்தில் பணிபுரிந்த இவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

**மருத மைந்தன்** : காத்தான்குடியைச் சேர்ந்தவர். கவிஞர், எழுத்தாளர்.

**ஆன் ரூபினி பிரான்சிஸ்**: இருதயபுரத்தைச் சார்ந்த இவர், பாடசாலை மாணவி.

**ஜின்னாஹ்** : புலவர்மணி ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் மகனான இவர் கவிதை, சிறுகதை, நாவல் என பல்துறை ஈடுபாட்டாளர்; மருதமுனையைச் சேர்ந்த இவர், கொழும்பில் வைத்தியராகக் கடமை புரிபவர்.

**யோகா யோகேந்திரன்** : திருக்கோவிலைச் சேர்ந்தவர்; சிறுகதை எழுத்தாளர்.

**ஆழியாள்** : பெண்நிலைவாத நோக்குடன் சிந்திக்கும் - எழுதும் ஈழத்தின் இளந்தலைமுறை எழுத்தாளர்களுள் முக்கிய மானவர். திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்

**இரத்தினம் அப்புத்துரை**:யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்; கனடாவில் வாழ்கின்றார்.

**ராணி சீதரன்**: இளையதலைமுறைப் பெண் எழுத்தாளர். யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர்.

**தர்மேந்திரா**: யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்; சிறுவனாக இருந்தபோதே கவிதைத் தொகுப்பு வெளியிட்டவர்.

**ஜுட் திலீபன் பிரான்சிஸ்** : இருதயபுரத்தைச் சேர்ந்தவர்; க.பொ.த.சாதாரணதரத்தில் படிப்பவர்.

**மு. பொன்னம்பலம்** : மூத்த தலைமுறை எழுத்தாளர்; கவிஞர்; புங்குடுதீவைச் சேர்ந்தவர்.

**மொழி வரதன்**: மலையகத்தின் முக்கிய எழுத்தாளருள் ஒருவரான இவர், தற்போது நுவரெலியா வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்.

**வி. என். எஸ். உதயச்சந்திரன்** : தற்போது ஆசிரியராகப் பணிபுரி கின்ற இவர், இலங்கை வானொலி கலை இலக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றின் தயாரிப்பாளர்.

உருத்திரமூர்த்தி . லலிதா

## ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்

தொகுப்பாசிரியர் : கலாநிதி. செ. யோகராசா

ஈழத்தில் வெளிவந்த குழந்தைப் பாடல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நூற்றிப்பதின்மூன்று பாடல்களைக் கொண்ட தொகுதியாக இது வெளிவருகின்றது. ஈழத்திலும் தமிழகத்திலும் ஈழத்துக் கவிதைகளின் தொகுப்பாக அவ்வப்போது சிறு நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும், ஈழத்துச் சிறுவர் பாடல்களின் தொகுப்பு எதுவுமே ஈழத்திலோ தமிழ் நாட்டிலோ வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆக, இத்துறையில் பெரிய அளவிலான முதன் முயற்சியாக இத் தொகுதி அமைகின்றது.



**செல்லையா யோகராசா** *(1949)* : யாழ்ப்பாணத்தில் கரணவாய் கிராமத்தைப் பிறப்பிமாகக் கொண்ட இவர் தமது இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியை கொழும்புப் பல்கலைக்கழகத்திலே (1968-1972) பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையினதும் பேராசிரியர் கா.சிவத்தம்பியினதும் வழிகாட்டலில் முறையே முதுகலைமாணி (1991) கலாநிதி (1999) பட்டங்களைப் பெற்றார். பாடசாலைக்காலத்தில் 'கருணையோகன்' என்ற பெயரில் கவிதை, சிறுகதை எழுதியவர், பல்கலைக்கழகம் சென்றபின்னர் நவீன இலக்கியம், ஈழத்து இலக்கியம், தமிழியியல் ஆய்வு, விமர்சனம், பெண்கள் இலக்கியம், சிறுவர் இலக்கியம் என்பன சார்ந்த ஆய்வாளராக வெளிப்பட்டார். பல நூல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளதுடன் பல தொகுப்பு நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். தற்போது கிழக்குப் பல்கலைக்கலைக்கழக மொழித்துறையில் முதுநிலை விரிவுரையாளராக விளங்குகின்றார்.

ISBN 978-955-659-030-7

9 789556 590302

விலை ரூபா 300.00

குமரன் புத்தக இல்லம்

விடயம் : சிறுவர் இலக்கியம்